JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 12| இதழ்: 10 | டிசம்பர் 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-

# யெகோவா காபோத்

என்பதற்கு மகிமையின் தேவன் என்று அர்த்தம்



ஆடு மேய்த்த தாவீதுக்கு அரியணையை தந்து, அவனை உயர்த்தி மகிமைப்படுத்திய தேவன்.

# Happy Christmas & New Year

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், என் அன்பின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

வாலிபர் உலகம் பத்திரிக்கையில் வரும் செய்திகளும், சாட்சிகளும், கட்டுரைகளும் உங்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும் என நம்புகிறேன். நானும், நம் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியர்கள், ஜெபக்குழுவினர் உங்களுக்காக ஜெபித்து வருகிறோம்.

கிறிஸ்துமஸ் பண்டிகை என்பது நம்மை நாமே மகிழ்வித்துக் கொள்வது அல்ல, மற்றவர்களை மகிழ்விப்பது தான் உண்மையான கிறிஸ்துமஸ். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதுதான் உண்மையான கிறிஸ்துமஸ் பண்டிகை. ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' (யோவான் 3:16).

தேவன் தம்முடைய குமாரனை உலகிற்குக் கொடுத்ததுதான் கிறிஸ்துமஸ். நாமும் தேவையிலுள்ளவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு, திக்கற்றவர்களுக்கு, ஏழைகளுக்கு கொடுத்து இயேசுவின் அன்பை வெளிப்படுத்துவதே கிறிஸ்துமஸ். கிறிஸ்துமஸ் பண்டிகையில் உண்மையான சந்தோஷத்தை நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால், உங்களிடத்திலுள்ள விலையேறப்பெற்றதை மற்றவர்களுக்குக் கொடுங்கள். இந்த கிறிஸ்துமஸ் நாளில் விலையேறப்பெற்ற இயேசுவை ஒருவருக்காவது சொல்லுங்கள். அவர்கள் சந்தோஷப்படுவார்கள், அதைவிட இயேசு சந்தோஷப்படுவார். *சுவிசேஷ ஒளி எங்கும் வீச, இயேசுவை மறக்காமல் எல்லோருக்கும் அறிவியுங்கள். வரப்போகிற மாபெரும் எழுப்புதலில் உங்களின் பங்கு மிகவும் முக்கியம். ஜெபித்து செயல்படுங்கள்!*

உங்கள் சகோதரன்,

Mohan C L

மோகன் சி.லாசரஸ்



5 இயேசுவின் தெரிந்தெடுப்பு...
12 நன்மை செய்யுங்கள்
20 வலிகள் வழிகளாக மாறின
30 கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

*இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats App மூலமாகவோ 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்*

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" **என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| **A/c. Name** | **: JESUS REDEEMS YOUTH MINISTRY** |
| **A/c. No.** | **: 054100710400515** |
| **BANK** | **: TAMILNAD MERCANTILE BANK LTD.,** |
| **BRANCH CODE** | **: Prahasapuram, Nazareth** |
| **BRANCH CODE** | **: 000054** |
| **IFS CODE** | **: TMBL0000054** |
| **MICR CODE** | **: 627060021** |
| **SWIFT CODE** | **: TMBLINBBTUT** |

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

தலைவாசல்

# கர்த்தர் என் மகிமை

''ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்'' (சங்கீதம் 3:3).

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் உயர்வு வருவது அபூர்வம். ஆனால் மண்ணில் கிடந்தவனை மாளிகையில் வைத்து அழகு பார்க்க தேவனால் மட்டும் தான் முடியும். தன் தந்தை தன் தரத்தை ஆடு மேய்க்க மாத்திரம் பயன்படுத்தும் போது, ஆடு மேய்க்கும் அந்த இளம் வாலிபனான தாவீதை உயர்த்தி அவனுக்கு மகுடம் சூட்டி அரியணையில் அமர வைத்த பெருமை தேவனையே சேரும்.



ஒரு தந்தையால் தன் மகனுக்கு கொடுக்க முடியாத உயர்வையும், மேன்மையையும் தேவன் தாவீதுக்கு கொடுத்தார். தாவீதின் வாழ்க்கையில் மனிதர்கள் அவனை மிதித்து கீழே விழத் தள்ளி, அவன் மீது நடந்து போகையில் கர்த்தரே தாவீதின் தலையை உயர்த்தினார்.

இதேபோல் தான் இன்றைக்கு மனித குலத்தின் சூழ்நிலையை யாராலும் மாற்ற முடியாத ஒன்றாக மாறிவிட்டது. மனிதன் கேள்விபட்டிராத கொள்ளை நோய்களும், விபத்துகளும், சமுதாய சூழலில் மாசும், வன்கொடுமையும் பெருகி விட்டது. விடுவிப்பார் இல்லாத சூழ்நிலையில் தான் இன்றைக்கு ஜனங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதனை மனிதன் அடித்து புசிப்பது போல், பல ஏமாற்றும் சம்பவங்களும், பணத்திற்காகவும், பதவிக்காகவும் கொலை செய்யக்கூடிய சூழல் உருவாகி விட்டது. இப்படி வாழ்க்கையில் தவிக்கும் மக்களின் விடிவுக்கு ஜீவ வழியைக்காட்ட, இயேசு தன்னுடைய மகிமையை துறந்து மண்ணில் வந்து, மனிதன் தான் இழந்த மகிமையை அவனுக்கு திரும்ப கொடுத்தார். மனிதன் தான் செய்த பாவத்திற்காக குற்ற மனசாட்சியோடு, தலைகுனிந்து அல்ல, தலை நிமிர்ந்து வாழ வழி காட்டினார்.

அந்த இயேசு உனக்காக இன்றும் காத்திருக்கிறார். உன் வாழ்க்கையில் அவரின் மகிமை வெளிப்பட அவருக்காக வாழ்ந்து, அவருடைய மகிமையை வெளிப்படுத்துகிற வாலிபர்களாய் நீங்கள் வலம் வர விரும்புகிறார்.

**''இயேசுவை ஒரு முறை கூட கேட்டிராத உன்னைப் போன்ற வாலிபர்கள் உண்டு. இந்த இயேசுவை ஓய்வின்றி அறிவிப்பது உன்னுடைய பொறுப்பு.''**

**''முடிந்த வரை முயற்சி செய், உலகத்தின் முடிவு வரை அறிவித்துக் கொண்டிரு.''** ●

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# இயேசுவின் தெரிந்தெடுப்பு...

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் இயேசுவோடு எந்த தொடர்பும் இல்லாமல் இருந்த சகோதரி பிளஸ்ஸியை இன்றைக்கு முழுநேர ஊழியக்காரியாக மாற்றி இருக்கிறார். இவர்களுக்குள் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன என்பதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**



சாட்சி: ஜிஷ்யா

### உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?

என் பெயர் Blessy Magtalin. நான் பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவள். எனது பெற்றோருக்கு நான் மூத்த மகள். எனது அப்பா Rtd. Mill Contractor, எனது தாயார் ஒரு தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்கள். எனக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் இருக்கிறார்கள். நான் ஒரு ME-VLSI DESIGN பட்டதாரி.



### கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த நீங்கள் பயபக்தியுடனும், ஆவிக்குரிய வாழ்விலும் வளர்க்கப்பட்டிருப்பீர்களே?

அதுதான் இல்லை, என் சிறு வயதில் வேதம் வாசிப்பது, ஜெபிப்பது, ஆலயம் செல்வது போன்ற எந்த பழக்கமும் என்னிடம் இல்லை. ஏனென்றால் நான் அதற்காகப் போதிக்கப்படவில்லை, என்னை யாரும் ஊக்கப்படுத்தவும் இல்லை. என் வீடு C.S.I. ஆலயத்திற்கு அருகில் தான் இருக்கிறது. ஆனாலும் நான் ஆலயத்திற்கு செல்வதில்லை. சபைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாமல் இருந்தேன். இயேசுவுக்கும் எனக்கும் வெகுதூரமாக இருந்தது. ஆனால் எனக்கு ஏதாவது தேவை என்றால் இயேசுவைத் தேடுவேன்.

### ஒகே... ஏன் நீங்கள் ஆலயத்திற்கு செல்வதற்கு பெற்றோர் அனுமதிக்கவில்லையா? இல்லை, உங்களுக்கு விருப்பம் இல்லையா?

என் அப்பா மிகவும் கண்டிப்பாக எங்களை வளர்த்தார்கள். அதனால் அதிகமாக வெளியே எங்கேயும் அனுப்பமாட்டார்கள். ஆலயத்திற்கு அனுப்புவதுகூட கொஞ்சம் கடினம் தான். அப்பா மிகவும் கண்டிப்பாக இருந்ததால் என் அப்பா மீது எனக்கு வெறுப்பு உண்டானது. எனவே நான் அப்பாவிடம் பேசவே பயப்படுவேன். ஆசையாக நான் நெருங்கிப் பழகுவதில்லை.





**சரி, ஆலயத்திற்கு செல்வதில்லை, அப்பாவிடமும் சரியாக பேசுவதில்லை. எப்படி இயேசுவை அறிந்துக் கொண்டீர்களா?**

ஜனவரி 26, 2011ல், மிஷனெரிகள் நடத்தும் வாலிபர் கூடுகையில் கலந்து கொண்ட போது, இயேசுவின் அன்பை அறிந்து, அக்கூடுகையில் இரட்சிக்கப்பட்டேன். அதன் பிறகும் இயேசுவுக்கும் எனக்கும் நெருங்கிய உறவு என்று சொல்ல முடியாது. எனக்கு என்ன தேவையோ அந்த தேவைகளை கேட்பேன். அப்படிதான் என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கை இருந்தது.

**சரி... இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள், அதன்பிறகு உங்கள் வாழ்க்கையில் ஏதாவது மாற்றம் உண்டானதா?**

2011 முதல் 2015ஆம் ஆண்டு வரை என் தேவைகளுக்காக மட்டுமே ஜெபித்துக் கொண்டிருந் தேன். அந்த சூழ்நிலையில் 2015ஆம் ஆண்டு என் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. என் பெற்றோர் என்னோடு மிகவும் நெருக்கமாக பழக ஆரம்பித்தார்கள். நிறைய சுதந்திரம் எங்களுக்குக் கொடுத்தார்கள். எல்லா இடத்துக்கும் அனுமதித்த என் பெற்றோருக்கு, என்மீது அளவுக்கடந்த நம்பிக்கை உண்டாக ஆரம்பித்தது. நானும் அவர்கள் கொடுத்த சுதந்திரத்தையோ, அவர்களுடைய நம் பிக்கையையோ தவறாக பயன்படுத்துவதில்லை. எனவே மிகவும் நம்பி முகாம்களுக்கெல்லாம் அனுப்ப ஆரம்பித்தார்கள்.

**சூப்பர்... 2011ஆம் ஆண்டு இரட்சிக்கப்பட்டேன் என்று சொன்னீர்கள்... இரட்சிக்கப்பட்டவுடன் நீங்கள் ஏதாவது ஊழியம் செய்தீர்களா?**

இல்லை... ஆனால் 2011ஆம் ஆண்டு வாலிபர் கூடுகையில் இரட்சிக்கப்பட்டவுடன் ஊழியம் என்றால் என்னவென்று தெரியாமலேயே ஊழியத்திற்கென்று என்னை ஒப்புக் கொடுத்தேன். 2015ஆம் ஆண்டு வரை நான் எதுவும் செய்யவில்லை. 2015 மே மாதம் எங்கள் ஆலயத்தில் VBS Directorஆக ஊழியம் செய்ய தேவன் கிருபை கொடுத்தார். ஆனால் இயேசுவுக்கும் எனக்கும் தனிப்பட்ட உறவு அதிகமாக இல்லை. ஆனால் சிறு சிறு ஊழியங்கள் செய்து கொண்டிருந்தேன்.

**ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்கள்... சரி, கர்த்தருக்குள் நிலைத்திருக்க முடிந்ததா?**

2015 டிசம்பர் மாதம், வெள்ளிக்கிழமை அன்று, ஆவியானவரின் வழிநடத்துதலின்படி சபையிலுள்ள 7 வாலிப பெண் பிள்ளைகள் சேர்ந்து உபவாசத் தோடு ஜெபித்த போது, எங்கள் எல்லோரையும் பரிசுத்த ஆவியானவர் நிரப்பினார். அன்றைக்கு சபையில் இரவு ஜெபத்தில், கர்த்தர் நிரப்பினதைக் குறித்து நான் மிகவும் வைராக்கியமாய் சாட்சி சொன் னேன். அதன்பிறகு கொஞ்ச நாட்கள் கர்த்தருக்குள் உண்மையாய் நிலைத்திருந்த நான் பின்மாற்றத் திற்குள் போனேன். அந்த நாட்களிலும் நிறைய சபைகளில் கர்த்தர் பயன்படுத்தினார். என் ஜெப வாழ்க்கை சரியாக இல்லை. ஆனால் ஊழியத் திற்கு போக வேண்டுமென்று சொல்லும் போது மட்டும், முந்தின நாள் இரவு அல்லது அன்றைக்கு காலையில் இயேசுவைத் தேடி அவர் சமுகத்திற்குப் போவேன். அப்போதுகூட இயேசு என்னை பயன்படுத் தினார். இப்படி தான் என் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

**சரி... கர்த்தருக்குள் நிலைத்திருக்கமுடிய வில்லை... உங்களால் பாவத்தை மேற்கொள்ள முடிந்ததா?**

இல்லை... ஜெப ஜீவியமும், கர்த்தருக்குள் உள்ள தொடர்பும் குறைய ஆரம்பித்தது. என் தனிப்பட்ட வாழ்க்கையில் நிறைய பாவப் பழக்கங்கள் இருந்தது. நான் ஊழியம் செய்தாலும் என்னிடம் நிறைய கெட்டப் பழக்கங்கள் இருந்தது. நான் ஊழியம் செய்கிறேன் என்ற பெருமை எனக்குள் இருந்தது. Youtube-ல் நிறைய கார்ட்டூன், ஹாலிவுட் படங்கள் பார்ப்பேன், நான் மட்டுமல்லாமல் குடும்பமாக



உட்கார்ந்து பார்ப்போம். Dress, Accessories, Shoes, Bags, Fashion, beauty என்று இவற்றிற்கெல்லாம் அடிமையாயிருந்தேன். நிறைய குறும்புத்தனம் செய்வேன், Hypertension இருந்த என் அம்மாவுக்கு பிடிக்காத ஒரு மகளாக இருந்தேன். ஆனால் வெளியே நான் ஊழியம் செய்கிற தியாகமுள்ள பக்தியுள்ள ஒரு வாலிப மகளாக காணப்பட்டேன்.

### சரி... பாவ பழக்கங்களை வைத்துக் கொண்டே ஊழியமும் செய்தீர்கள்... சரி, எப்பொழுது தான் முழுவதுமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டீர்கள்?

2020ஆம் ஆண்டு லாக்டவுனில் என்னை உடைத்து வனைய ஒப்புக்கொடுத்தேன். கர்த்தர் என்னை மாற்றினார். இருந்தாலும் முழு மாற்றத்திற்கு நான் இடம் கொடுக்கவில்லை. 2021 Igniters Camp–ல் தேவன் என்னோடு பேசினார், என்னை அபிஷேகம் செய்தார். சுவிசேஷ தலைமுறைக்கென்று அபிஷேகம் செய்யப்பட்டேன். Igniter campக்கு பிறகு ஜெப வாழ்க்கையில் மாற்றம் வர ஆரம்பித்தது. தனிப்பட்ட வாழ்க்கை மாறினது. இயேசுவை சார்ந்து வாழ ஆரம்பித்தேன். என்னுடைய அடிமைத்தனம், கெட்டப்பழக்கங்கள் எல்லாம் மாறினது. என் பெற்றோருக்கும் மிகவும் பிடித்த மகளாய் இப்போது இருக்கிறேன்.

### உங்கள் வாழ்க்கை மாறியது. இப்பொழுது ஆண்டவருக்காக என்ன செய்கிறீர்கள்?

Igniters Ministry மூலமாக எங்கள் தாலுகாவில் ஊழியத்திற்காக சென்ற போது, கர்த்தர் சுவிசேஷ தலைமுறையைக் குறித்து நினைவுப்படுத்தி என்னையும் பயன்படுத்தினார். அழைத்த அழைப்பை தெளிவாய் உறுதிபடுத்தி, எரேமியா 33:3ம் வசனத்தை வாக்குத்தத்தமாய் எனக்குக் கொடுத்து, என்னை வழிநடத்தி வருகிறார். இதற்கு முன்னால் ஏதாவது முகாம்களில் நான் இயேசப்பாவிடம் பேசுவேன். இயேசு எப்போதாவது என்னோடு பேசுவார். ஆனால் Igniter முகாமிற்கு பிறகு தினமும் இயேசு என்னோடு பேசுகிறார். ஜெபிக்க ஜெபிக்க தேவன் அதிகமாக என்னை பயன்படுத்துகிறார். வாலிப பெண்கள் ஜெப ஐக்கியத்தில் நாங்கள் ஒரு குழுவாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் கூடி ஜெபிப்போம், எங்கள் பின்கோடிலுள்ள கிராமங்களுக்கு வாரம் ஒருமுறை சுவிசேஷம் அறிவிக்க செல்கிறோம். அந்த கிராமங்களில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்கிறார். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு என்னை முழுநேரமாக ஊழியம் செய்ய அழைத்து கர்த்தர் பயன்படுத்தியும் வருகிறார்.



### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நாம் இயேசுவை முழுவதுமாய் சார்ந்து அவர் சித்தத்தை முழுமையாய் செய்யும்போது, கர்த்தரின் வழிநடத்துதலை அழகாய் காண முடியும். ஒரு வேளை நீங்களும் பின் மாற்றத்திற்குள் போயிருந்தால் இயேசுவிடம் திரும்பி வாருங்கள். கர்த்தர் பாவத்தை மன்னித்து என்னை தெரிந்து கொண்டது போல் உங்களையும் தெரிந்தெடுத்து பயன்படுத்துவார்.

**அன்பான வாலிபர்களே, சகோதரி பிளஸ்ஸிக்கு கர்த்தர் கிருபை மேல் கிருபை கொடுத்து தெரிந்தெடுத்து ஊழியம் செய்ய வைத்திருக்கிறார் என்றால் உங்களையும் கர்த்தர் தெரிந்தெடுத்து மகிமையாய் பயன்படுத்துவார்●**

வேத ஆய்வு: ரேச்சல்

# உன்னதப்பாட்டு

(ஐக்கியத்தின் வழியாய் சந்தோஷம்)

**அறிமுகம்**

இது காதல் கவிதைகளின் தொகுப்பு நூல். தேவனுடைய பார்வையில் அன்பையும், திருமணத்தையும் சித்தரிக்கிற உவமைகள் நிறைந்த காதல் பாட்டுகளாக இப்புத்தகம் இருக்கிறது.

**ஆசிரியர்:** சாலொமோன்
**காலம்:** கி.மு. 965
**அதிகாரங்கள்:** 8
**வசனங்கள்:** 117
**வார்த்தைகள்:** 2,661
**முக்கிய நபர்கள்:** சாலொமோன் / சூலமித்தியாள்/ எருசலேமின் குமாரத்திகள்.

## உன்னதப்பாட்டில் கிறிஸ்து

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் மக்களின் நாயகர் (உன் சிருஷ்டிகரே உன் நாயகர் – ஏசாயா 54:5). புதிய ஏற்பாட்டில் சபையை மணவாட்டி என (2 கொரி. 11:2) அழைக்கப்படுகிறது. இப்புத்தகத்தில் வரும் மணவாளன் – இயேசு கிறிஸ்து.

## உன்னதப்பாட்டு சுருக்கம்

### அன்பில் விழுதல்

- அன்பிற்காக மணவாட்டியின் ஏக்கம் (1:1–8 வசனங்கள்)
- பரஸ்பர அன்பை வெளிப்படுத்தல் (1:9–2:7 வசனங்கள்)
- இராஜா மணவாட்டியைக் காண்கிறார் (2:8–17 வசனங்கள்)
- மணவாட்டி பிரிவைப் பற்றி முதல் முறை கனவு காண்கிறாள் (3:1–5 வசனங்கள்)

### அன்பில் இணைதல்



- திருமண ஊர்வலம் (3:6–11 வசனங்கள்)
- மணமகளின் அழகைப் புகழ்தல் (4:1–15 வசனங்கள்)
- திருமணம் முடிந்தது (4:16–5:1 வசனங்கள்)

### அன்பில் போராட்டம்



- மணவாட்டி இரண்டாவது தடவை பிரிவைப் பற்றிக் கனவு காண்கிறாள் (5:2–7 வசனங்கள்)
- மணவாளன் அழகைப் புகழ்தல் (5:8–6:3 வசனங்கள்)
- மணவாட்டியின் அழகைப் புகழ்தல் (6:4–7:10 வசனங்கள்)

### அன்பில் முதிர்ச்சி

- மணவாட்டிக்கு தன் வீட்டுக்கு செல்ல ஆர்வம் (7:11–8:4 வசனங்கள்)
- பிரயாணமும், வீட்டுக்கு வருதலும் (8:5–14 வசனங்கள்)

# REVIVAL IGNITERS

**EVERY 1ST SUNDAY**
(5th December)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center,
9442885315

**EVERY 2ND SATURDAY**
(11th December)

MADURAI (4:30 - 6:30PM)
Gethsamane Prayer Centre
9750955548 | 0452-2677300

**EVERY 2ND SUNDAY**
(12th December)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre,
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Gethsemane Prayer Centre,
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 6 PM)**
St. Paul's Matriculation School,
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center,
9750955548 | 9976766422

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,
Surandai.
9443962141 | 9750955548

**EVERY 3RD SUNDAY**
(19th December)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
9488475315

**JEBAMALAI (2PM)**
Keelamathapuram,
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre,
9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School,
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound,
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
9500283179 | 9442885315

**EVERY 4TH SATURDAY**
(25th December)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
9788788512

**EVERY 4TH SUNDAY**
(26th December)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower,
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9750722000

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
Gethsamane Prayer Center,
9442885315

















# MOUNT SINAI

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக நவம்பர் மாதம் 6ம் தேதி ஆன்லைன் மூலமாக மவுண்ட் சீனாய் வாலிபர் உபவாச ஜெபத்தை நடத்த தேவன் கிருபை செய்தார். கர்த்தரின் வாக்குப்படி வாலிபர்களை எழுப்புதலுக்காக சேனையாக எழுப்பியுள்ளார். சமூக வலைத் தளங்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டதில் 3000 பேர் பங்குப் பெற்று தேசத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபித்தனர்.












# கிறிஸ்துமஸ் என்பது...



## பகிர்ந்தளிக்கக்கூடிய நேரம்

**(யோவான் 3:1-21)**

நம் நேரத்தை, அன்பை, பணத்தை, உணவை தேவையில் இருப்பவர்களுக்கு பகிர்ந்தளிக்கலாமே.



## பாராட்டக்கூடிய நேரம்

**(லூக்கா 1:68-79)**

நமக்கு உதவியவர்களை மறக்காமல், அவர்களை நினைவுகூர்ந்து, அவர்களைப் பாராட்டி **SMS, Phone Call** செய்து அவர்களைப் பாராட்டலாமே.



## நம்பிக்கையின் நேரம்

**(யோவான் 14:1-6)**

பலத் தோல்விகளைக் கண்டுத் துவண்டு போய் நம்பிக்கையற்ற நிலையில் இருப்பவர்களுக்கு நம்பிக்கை நங்கூரமாகிய இயேசுவை அறிமுகம் செய்யலாமே!



## நன்றி செலுத்தும் நேரம்

**(2 கொரிந்தியர் 9:6-15)**

இந்த வருடம் முழுவதும் கர்த்தர் செய்த எல்லா நன்மைகளையும் நினைவுகூர்ந்து நன்றி செலுத்தலாமே! நிறைவேறாத காரியங்களும் ஏற்ற நேரத்தில் நிறைவேறும்.



## பரிசுகள் கொடுக்கும் நேரம்

**(எபேசியர் 2:4-10; யோவான் 3:16)**

பரிசு என்றவுடன் ஏதோ விலையுயர்ந்த பொருட்களை கொடுக்க வேண்டும் என்று யோசிக்காதீர்கள். உங்களை காயப்படுத்தினவர்களை, துரோகம் செய்தவர்களை மன்னித்து அவர்களோடு அன்பு செலுத்துங்கள். அதுவே நீங்கள் கொடுக்கும் கிறிஸ்துமஸ் பரிசு.



# நன்மை செய்யுங்கள்...

செய்தி: மோகன் சி. லாசரஸ்



**''அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்'' (எபி. 13:16).** மற்றவர்களுக்கு நன்மை செய்வதும், தானதர்மம் செய்வதுமே கர்த்தருக்கு பிரியமான பலி. உங்கள் கிராமத்திற்கு, பட்டணத்திற்கு, சபைக்கு ஏழை மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறீர்கள்? எத்தனை ஏழைகளுக்கு உதவி செய்திருக்கிறீர்கள்? என்று ஒரு கேள்விக் கேட்டுப் பாருங்கள்! நன்னை செய்ய வேண்டும், நற்கிரியை செய்ய வேண்டும், தானதர்மம் செய்ய வேண்டும் என்று ஆண்டவர் வேத புத்தகம் முழுவதும் எழுதி வைத்திருக்கிறார்.

ஊழியங்களுக்கு உதவி செய்கிறார்கள். வியாபாரிகள், தொழில் செய்கிறவர்கள் கர்த்தருக்கு நிறைய செய்கி றோம் என்று சொல்கிறீர்கள், ஆனால் பத்தில் ஒன்றை கொடுக்கிறீர்களா? நிறைய பேர் பத்தில் ஒன்று கொடுப்பதில்லை. யாராவது சபை கட்டுவதற்கு டொனேஷன் கேட்டால், 50,000 ரூபாய் கொடுப்பார்கள். அனாதை இல்லம் நடத்து கிறவர்கள் என்றால் ரூபாய் 10,000 கொடுத்து,






தசமபாகம் கர்த்தருக்குரியது என்று நாம் அனைவருக்கும் தெரிந்த காரியம். நம்முடைய வருமானத்தில் பத்தில் ஒன்றை கர்த்தருக்கு கொடுக்க வேண்டும் என்று வசனத் தில் சொல்லப்பட்டிருக்கிறது, நம்மை ஆசீர்வதிப்பதற்காக தேவன் வைத்திருக்கிற ஒரு வழிதான் தசமபாகம் ஆனால் பத்தில் ஒன்றை கர்த்தருக்கு கொடுக்கிறோமா? ஒருசிலர் சம்பளம் வந்தவுடன், கர்த்தரின் பாதத்தில் வைத்து ஜெபம் பண்ணி, பத்தில் ஒன்றை கர்த்தருக்கென்று எடுத்து வைக்கிறார்கள். சபைக்கு, மற்ற

அதில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். அதுவல்ல, ஏழைகளுக்குக் கொடுங்கள், தரித்திரருக்கு உதவி செய்யுங்கள், நன்மை செய்யுங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

லூக்கா 18ம் அதிகாரத்தில், ஒரு வாலிபன் இயேசுவினிடத்தில் வந்து, நித்திய ஜீவனை சுதந்தரிக்க நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறான். அதற்கு கற்பனைகளைக் கைக்கொள்ள

வேண்டுமென்று கர்த்தர் சொல்கிறார். அவன் அதற்கு, திருடாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக இச்சியாதிருப்பாக, கொலை செய்யாதிருப்பாயாக, பெற்ற தாய்–தகப்பனுக்கு கீழ்ப்படிவாயாக போன்ற கற்பனைகளை சிறு வயதிலிருந்தே கடைபிடித்து நடக்கிறேன் என்று சொன்னான்.



கர்த்தர் அவனிடத்தில் காணப்பட்ட தாழ்மையைப் பார்க்கிறார். நித்திய ஜீவனைப் பெற வேண்டும் என்கிற ஆசை அவனிடம் இருக்கிறதை தேவன் அறிந்து கொண்டார். கற்பனைகளுக்கெல்லாம் கீழ்ப்படிகிறான் என்று இயேசு அவனிடத்தில் அன்பு கூருகிறார். ஆனால் உன்னிடம் ஒரே ஒரு குறை இருக்கிறது என்றார். பணம், பணம் என்று எப்பொழுதும் உன் இருதயம் அதன்மீது இருக்கிறது. அதனால், உன் சொத்துக்களை விற்று ஏழைகளுக்கு கொடுத்து விட்டு என்னைப் பின்பற்றி வா என்று சொன்னார். அந்த வாலிபனுடைய இருதயம் அதன்மீது இருந்ததால், அவனிடம் அப்படிக் கேட்டார். ஏழைகளைக் குறித்து அவனுக்கு அக்கறை இல்லை. அடுத்தவர்களைக் குறித்து அவனுக்கு அன்பில்லை. மற்றவர்கள் தேவையில் இருக்கிறார்கள் என்ற எண்ணமே இல்லாமல் அவன் சுயநலமாய் வாழ்ந்துக் கொண்டிருந்ததால் தான் அவனைப் பார்த்து கர்த்தர் அப்படிச் சொன்னார். இயேசுவைத் தேடி வந்த குருடர்கள், சப்பாணிகள், நோயாளிகள், பிசாசு பிடித்தவர்கள் அனைவரும் நன்மை பெற்று சந்தோஷமாக திரும்பிப் போனார்கள். ஆனால், இவன் ஒருவன் மாத்திரம் துக்கத்தோடு இயேசுவை விட்டுப் போனான். ஏனென்றால் அவனுடைய இருதயம் பணத்தின் மேலும், சுயநலமான எண்ணத்துடனும், அடுத்தவர்களைக் குறித்து அக்கறையும் இல்லாமல் இருந்தான். ஒன்று இயேசுவுக்காக வாழ வேண்டும், இன்னொன்று மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும். அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ஏழைகள் மேல், தரித்திரர் மேல் நீங்கள் அன்பு காட்ட வேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார். ஏழைகளுக்கு உதவி செய்ய, செய்ய கர்த்தருடைய கணக்கில் கடன் ஏறிவிடும். கர்த்தர் கடனாளியாக இருக்கமாட்டார், உடனே உங்களுக்கு பல மடங்காக திருப்பி கொடுத்து விடுவார். நீங்கள் ஏழைகளுக்கு கொடுக்க, கொடுக்க கர்த்தர் இந்தப் பக்கம் தந்துக் கொண்டே இருப்பார். அதை மறந்து விடாதீர்கள். இன்றைக்கு எத்தனை ஏழைகள் மேல் அன்பு காட்டியிருக்கிறீர்கள்? எத்தனை ஏழைகளுக்கு உதவி செய்திருக்கிறீர்கள்? எத்தனை ஏழைகளுக்கு உங்களால் முடிந்ததை செய்திருக்கிறீர்கள்? என்று யோசித்துப் பாருங்கள்.




வேதத்தில் தொற்காள் என்னும் சீஷியைக் குறித்து பார்க்கிறோம். **"யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங் கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும்**





**மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்'' (அப். 9:36).** அவள் சீஷியாக இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள். தொற்காள் விதவைகளுக்கும் திக்கற்றப் பிள்ளைகளுக்கும் உடைகளை தைத்து கொடுத்து உதவி செய்கிறாள். இவர்களால் தான் உடை உடுத்துகிறோம் என்று அந்த மக்கள் சந்தோஷமாக சொல்கிறார்கள். அதனால்தான் வியாதிப்பட்டு மரித்தவளை உயிரோடு எழுப்ப வேண்டுமென்று பேதுருவிற்குள் ஆண்டவர் வைராக்கியத்தை கொடுத்து, இவள் உயிரோடிருந்தால் இன்னும் நான்கு பேருக்கு நன்மை செய்வாள் என்பதற்காக கர்த்தர் அவளை உயிரோடு எழும்பப் பண்ணுகிறார். அந்த அற்புதம் நடக்க அவருடைய நற்கிரியையே காரணம். வியாதி வந்து விட்டால் ஏன் உங்களை சுகமாக்க வேண்டும்? என்று கர்த்தர் கேட்கிறார். நான் உன்னை சுகமாக்க முடியும், ஆனால், ஏன் நான் உன்னை சுகமாக்க வேண்டும்? நான் ஏன் உனக்கு அற்புதம் செய்ய வேண்டும்? நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? இவனுக்கு சுகம் கொடுத்தால் இன்னும் நான்கு பேருக்கு நன்மை செய்வான், இவளுக்கு சுகம் கொடுத்தால் இன்னும் நான்கு ஏழைகளுக்கு உதவி செய்வாள். அதற்காக இவருடைய/இவளுடைய ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்ல வேண்டும். அந்த மாதிரியான ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார்

**அன்பான வாலிபர்களே! நம்முடைய தேவன் இரக்கமுள்ள தேவன். ஜனங்களுக்காக பரிதபிக்கிற தேவன். எனவே நீங்களும் ஏழைகளுக்கு உதவிசெய்கிறவர்களாக மாற வேண்டுமென்றே ஆண்டவர் விரும்புகிறார். இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நன்மை செய்வதற்கு ஒரு வாய்ப்பை கொடுத் திருக்கிறார். நீங்களும் இயேசுவைப் போல நன்மை செய்து ஆண்டவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்●**

# சாக்லேட் கேக்



## தேவையான பொருட்கள்

சர்க்கரை 250 கிராம்
மைதா 300 கிராம்
முட்டை 4
பட்டர் 150 கிராம்
பேக்கிங் பவுடர் 1 கிராம்
டியூட்டி ப்ரூட்டி தேவைக்கேற்ப
முந்திரி 50 கிராம்
செரி 50 கிராம்
திராட்சை தேவைக்கேற்ப
வெண்ணிலா கலர் தேவைக்கேற்ப

## செய்முறை

*ஒரு பாத்திரத்தில் மைதா மாவை எடுத்துக் கொள்ளவும். இதனோடு திராட்சை முந்திரியை சிறிதாக வெட்டி கலந்து கொள்ளவும். அதன்பின் வெண்ணிலா கலருடன் உருக்கிய பட்டர் மற்றும் சர்க்கரையை சேர்த்துக் கொள்ளவும். இந்த கலவையுடன் முட்டையை சேர்த்து நன்றாக கலக்கவும். இப்பொழுது உங்களுக்கு கலவை தயாரகிவிட்டது. இந்த கலவையை மைக்ரோ அவனில் வைத்து 120 டிகிரி சூட்டில் அரைமணி நேரம் வைத்து எடுத்தால் அருமையான கிறிஸ்துமஸ் கேக் ரெடி.*

தகவல்: ஜ்லியட் கிளார்லின்




# சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்!



இந்திய தேசத்தில் 2000 இனங்கள் உள்ளன. இதில் சுமார் 200 இன மக்களே இதுவரை சந்திக்கப்பட்டிருக்கிறார்கள். சந்திக்கப்படாத நம் மக்களுக்கு எப்படி ஆத்தும ஆதாயம் செய்வது என்பதனை இப்பகுதியில் நாம் காணலாம்.

## 1. ஜெபத்தின் மூலம் ஆத்தும ஆதாயம்

● ஆத்தும ஆதாயத்திற்காக அழைக்கப்பட்ட நாம், முதலாவதாக ஜெபம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும்.

● ஜெபிக்காமல் மிஷனெரியாய் புறப்படுவது வீணானது. முழங்கால் பயிற்சி இல்லாதவர்கள் முழங்கப்போவது ஆபத்தானது.




### ★ தேசத்துக்கான ஜெபம்

ஆபிரகாமைப் போலவே நாமும் நம் தேசத்திலிருக்கும் 28 மாநிலங்களுக்காக, 8 யூனியன் பிரதேசங்களுக்காக, சுமார் 140 கோடி மக்களுக்காக, ஆயிரகணக்கான கிராமங்களுக்காக அனுதினமும் மன்றாடி ஜெபிப்போமாக.

### ★சொந்த குடும்பத்திற்காக ஜெபம்

சிலர் உலகம் முழுவதிலும் பலரை ஆதாயப்படுத்திவிடுவார்கள். ஆனால் தன் சொந்த குடும்பத்திலுள்ள நபர்களை ஆதாயப்படுத்தாமல் தோல்வியடைவார்கள். எனவே, நாம் நமது குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்து ஆதாயப்படுத்திக் கொள்வோம்.

### ★ தன் எதிராளிக்களுக்காக ஜெபம்

நாம் ஒவ்வொருவரும் தேவ அன்பினால் நிரம்பி நமது சத்துருக்களை தேவன் மன்னித்து, இரட்சிக்கும்படி நாம் ஜெபிக்க வேண்டியது அவசியமானது. இப்படிப்பட்டவர்களையும் கர்த்தர் இரட்சித்து வழிநடத்துவார்.

## 2. தீர்க்கதரிசன ஊழியத்தின் மூலம் ஆத்தும ஆதாயம்

● ஆத்துமா ஆதாயம் செய்வதில் தீர்க்கதரிசன வரம் முக்கிய பங்கு பெற்றிருக்கிறது.

● தீர்க்கதரிசன வரம் நம் முன் வருகிற ஜனங்களின் உள்ளான நிலையை வெளிப்படுத்துவதால், தெய்வ பயத்துடன் மனந்திரும்பி இரட்சிக்கப்படுகிறார்கள்.

## 3. பிரசங்கத்தின் மூலம் ஆத்தும ஆதாயம்

★ ஆத்தும ஆதாயம் செய்கிறவர்கள் பிரசங்கிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

★ மேடையிலும் பிரசங்கிக்க வேண்டும், தனி மனிதனுக்கும் பிரசங்கிக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்து இயேசு நல்லவர், அவர் உங்கள் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்ற எளிமையான சத்தியத்தை இனிய தமிழில் எளிய நடையில் பேசப்பழக வேண்டும்.

## 4. கொடுப்பதின் மூலம் ஆத்தும ஆதாயம்

★ ஆத்தும ஆதாயத்தில் கொடுப்பதும் மிகவும் முக்கியமானது.

★ உங்கள் பொருட்களின் மூலமாகவும் பணத்தின் மூலமாகவும் கர்த்தருடைய ஊழியத்தை செய்து, ஆத்தும ஆதாயத்திற்கான வாய்க்காலாக நீங்கள் மாற முடியும்.

**"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" (லூக்கா 16:9).**

**எனவே ஜெபத்தின் மூலம், தீர்க்கதரிசனம் உரைப்பதின் மூலம், பிரசங்கிப்பதின் மூலம், கொடுப்பதின் மூலம் ஆத்துமாக்களை இப்பூலோகத்தில் ஆதாயம் செய்து பரலோக ராஜ்யத்தில் சேர்க்க தேவன் நமக்கு கிருபை தருவாராக●**





# மகிமையின் தேவன்!

முகப்பு செய்தி: சதீஷ்

யூகோஸ்லோவியாவில் உள்ள ஸ்கோப்ஜி நகரத்தில் 1910ஆம் ஆண்டு பிறந்தவர் ஆக்னஸ், இளம் வயதிலிருந்து படிப்பில் தீவிர ஆர்வம் கொண்டவரான இவருக்கு நகைச்சுவை உணர்வு அதிகம். இதனால் எப்போதும் இவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். யார் இந்த ஆக்னஸ்? என்று தானே நீங்கள் யோசிக்கிறீர்கள். இவருடைய பெற்றோர் இவருக்கு வைத்தப் பெயர் ஆக்னஸ். ஆனால் இந்த உலகத்திலுள்ள மக்கள் அவருக்கு ''அன்னை தெரசா'' என்ற பெயரை வைத்தார்கள்.

அன்னை தெரசா 1929ஆம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி தனது பத்தொன்பதாவது வயதில் கொல்கத்தாவில் காலடி வைத்தார். முதன்முதலாக சேரிக்குள் நுழையும் போது அவர் கைகளில் வெறும் 5 ரூபாய் பணமும், 3 சேலைகள் மட்டுமே இருந்தது. கடுமையான சூழ்நிலையில் ஆதரவற்றோர் மத்தியில் தன்னுடைய பணியைத் தொடங்கினார். 1950ஆம் ஆண்டு ''Missionaries of Charity'' என்ற அமைப்பை உருவாக்கினார். 1952-ல் ''நிர்மல் இல்லம்'' என்ற இல்லத்தைத் திறந்தார். கொல்கத்தாவின் தெருக்களில் உயிர் ஊசலாடிய நிலையில் இருக்கும், பல்லாயிரக்கணக்கான ஆதரவற்ற ஜனங் களுக்கு இதுதான் கருணைக் கடலாக இருந்தது. 1957ல் தொழுநோயாளிகளுக்கான இல்லத்தையும் தொடங்கி, தமது பணியை அகலப்படுத்தினார்.

ஆரம்பக் காலக்கட்டத்தில் 10 சகோதரிகளுடன் தொடங்கிய இவரது அமைப்பு, இன்று உலகம் முழுவதும் 123 நாடுகளில் 4000 தன்னார்வ தொண்டர்களோடு 60,000க்கும் அதிகமான சேவை மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



1962ஆம் ஆண்டு ''பத்ம ஸ்ரீ விருது'' 1979ஆம் ஆண்டு அமைதிக்கான ''நோபல் பரிசு'' இப்படி பல உயரிய விருதுகளைப் பெற்று இருந்தாலும், இவற்றை எல்லாம் கொஞ்சங்கூட பெரிதாக நினைக்காமல், ஆதரவற்ற ஏழ்மை நிலையில் இருக்கும் ஜனங்களைத் தேடிப் போய் கடவுளின் அன்பை வெளிப்படுத் தினார். அன்னை தெரசா தன்னைப் பற்றி குறிப்பிடும்போது, ''அன்பின் கடிதத்தை இவ்வுலகிற்கு எழுதுகின்ற கடவுளின் கையில் இருக்கும் சிறிய பென்சில் நான்'' என்று தன்னை தாழ்த்திக் கொள்வார். இவர் மூலமாக, இருளில் இருக்கும் திரளான ஜனங்கள் வெளிச்சத்தைக் கண்டார்கள். தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட இவரே தன்னை இவ்வளவாய் தாழ்த்தி தன்னுடைய அன்பை வெளிப்படுத்தியுள்ளார் என்றால் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்களை பாவ இருளிலிருந்து மீட்பதற்காகவே தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர்

மகிமையின் தேவன் தன்னுடைய மகிமையை இழந்து மண்ணான மனிதனுக்கு தன்னுடைய மகிமையைத் தரும்படி, இந்தப் பூமிக்கு மனிதனைத் தேடி வந்தார். **''...கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது...'' (லூக்கா 2:9).**

கர்த்தருடைய மகிமை என்றால் அவருடைய பிரசன்னம் அல்லது அவருடைய மகிமையின் ஒளி என்று சொல்லலாம். ஆதாம் ஏவாள் செய்த பாவத்தின் மூலம், முழு மனுக்குலமும் பாவத் திற்குள்ளாகி தேவன் தந்த மகிமையை இழந்ததால்,



பாவ இருள் மனுக்குலத்தை சூழ்ந்து கொண்டது. மனிதனுக்குள் பாவம் இருக்குமானால் அவனுக்குள் இருக்கிற வெளிச்சம், அதாவது ஒளி அவனை விட்டு விலகி இருள் சூழ்ந்து கொள்ளும். இப்படி பாவத்திலும் சாபத்திலும் வாழ்ந்த மனுக்குலம் பாவ இருளுக்குள் போய்க் கொண்டிருந்த பொழுது பிதாவாகிய தேவனுக்கு மனுக்குலத்தை மீட்க வேண்டிய அவசியம் இருந்தது. அவர் தான் சிருஷ்டித்த மக்களுக்காக பரிதாபப்பட்டார். பாவத்தின் உச்சியிலும் பாவ இருளிலும் இருந்த தன்னுடைய ஜனங்களை மீட்பதற்காகவும், அவர்கள் இழந்து போன தேவ மகிமையை அதாவது



ஒளியைப் பெற்றுக் கொள்ளவும், தம்முடைய ஒரேப் பேறான குமாரனாகிய இயேசுவைத் தன்னுடைய உன்னதமான மகிமையை விட்டு இந்த உலகத்திற்கு அனுப்பினார். **''உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி'' (யோவான் 1:9).** ஆதியிலே வார்த்தையாக இருந்தவர் இயேசுவாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் ஒளியாக இருந்தது. அந்த மகிமையின் ஒளியானவர் உங்களுக்குள் வாசமாய் இருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். **''நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்'' (யோவான் 17:22).** இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு பகிர்ந்து கொள்வதே உண்மையான கிறிஸ்துமஸ் ஆகும். சில குழந்தைகள் கல்வியாண்டு முடித்தவுடன், பயன்படுத்தாத நோட்டு, புத்தகங்களை அப்படியே வைத்து, தன்னிடம் இருக்கும் அனைத்தையும் ஏழை–எளிய மக்களுக்கு பகிர்ந்து கொடுத்து, இயேசுவின் அன்பை வெளிப்படுத்துகின்றார்கள். உங்களைச் சுற்றி இருக்கும் ஜனங்களை நோக்கிப் பாருங்கள். பாவத்திலும், சாபத்திலும், தரித்திரத்திலும், இருளிலும் இருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சத்தை காண்பிக்கும்படியாகத்தான் மகிமையின் தேவன் அவருடைய மகிமையின் ஒளியை உங்களுக்கு கொடுத்திருக்கிறார். ஒரு நிமிடம் உங்களை ஆராய்ந்துப் பாருங்கள். உங்களுக்குள் இருக்கிற ஒளியாகிய இயேசுவை எத்தனை பேருக்கு இந்த ஆண்டில் அறிமுகம் செய்து இருக்கிறீர்கள்? நீங்கள் ஒளியாகிய இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்திருந்தால் உங்களுக்காக நான் தேவனை துதிக்கிறேன். ஒருவேளை நான் 11 மாதமும் வீணடித்து விட்டேன் என்று நீங்கள் யோசித்தீர்களானால், இந்த டிசம்பர் மாதம் முழுவதும் நீங்கள் மகிமையின் ஒளியாகிய இயேசுவை உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தேவனை அறியாதவர்களுக்கும் அறிவிப்பதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. கிறிஸ்து பிறப்பின் செய்தியை எத்தனை பேருக்கு சொல்ல வேண்டும் என்று இன்றே தீர்மானம் செய்யுங்கள். மகிமையின் ஒளியாகிய இயேசுவை உங்கள் மூலமாக ஏற்றுக் கொள்வதற்கு ஜனங்கள் ஆயத்தமாக இருக்கின்றனர்.

*எனக்கன்பான வாலிபர்களே! மனுகுலம் இரட்சிக்கப்பட வேண்டுமானால், தேவ குமாரன் தம் மகிமையுள்ள தெய்வீக மேன்மையை தியாகம் செய்து பூலோகத்தில் மனிதனாகப் பிறக்க வேண்டும். இதுதான் தேவ திட்டம். அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருக்கும் ஜனங்களை, மகிமையின் ஒளியாகிய இயேசுவிடம் திருப்புவதுதான் தேவன் உங்களை குறித்து வைத்திருக்கிற திட்டம். ''முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்'' (எபே. 5:8). இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நீங்கள் இயேசுவின் சுடராக உங்களுக்குள் இருக்கின்ற வெளிச்சம் மற்றவர்கள் மேல் பிரகாசிக்கட்டும்* ●

# மோசேக்கு வெளிப்பட்ட மகிமை

சிந்தனை சிதறல்: காலேப்



இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க கர்த்தர் பயன்படுத்திய பாத்திரம் மோசே. மோசேயின் மூலம் பலத்த அற்புதங்களை செய்து, தேவன் அவர்களை விடுவித்தார். இப்படிப்பட்ட மகத்தான காரியங்களை ஒரு மனிதன் மூலம் தேவன் செய்தால் அவன் திருப்தியடைந்துவிட கூடும். ஆனால் மோசேயோ இவ்வளவு வல்லமையான காரியங்களைச் செய்கிற தேவனை நான் காண வேண்டும், அவருடைய மகிமையை பார்க்க வேண்டும் என்று வாஞ்சித்தார் (யாத். 33:18).

தேவன் அவனுடைய வாஞ்சையைப் பார்த்து, "...இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கேகன்மலையில்நில்லு" (யாத் 33:21) என்று கட்டளையிட்டார். கர்த்தருடைய மகிமையைமோசே பார்க்க வேண்டுமென்றால், கர்த்தர் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் அங்கே காணப்பட வேண்டும், அவர் அப்படி செய்ததின் நிமித்தம் தேவ மகிமையைப் பார்த்தார் (யாத். 34:5-12).

அன்பான வாலிபர்களே! அநேக நேரம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் நாம் திருப்தியடைந்து வளராமல் நின்று விடுகிறோம். இதனால் தேவனுக்குள் இருக்கும் உன்னதமான ஆவிக்குரிய அனுபவங்களைப் பெறாமல் தவற விடுகிறோம். மோசேயை போல் தேவ மகிமையை வாஞ்சித்து, கன்மலையாகிய தேவ சமூகத்தில் காத்திருக்கும் போது, அவர் தம்முடைய மகிமையை நமக்கும் வெளிப்படுத்துவார்.

"அப்பொழுது அவன்: உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான்" (யாத். 33:18).

# தேவாலயத்தில் வெளிப்பட்ட மகிமை



தாவீது ராஜாவின் இருதயத்தில் தேவனுக்காக ஒரு ஆலயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விருப்பம் எழுந்தது. அந்த விருப்பத்தை சாலொமோன் ராஜா ஆட்சி செய்த காலத்தில், பிரமாண்டமாக விலையுயர்ந்த பொருட்களினாலான ஆலயத்தைக் கட்டி முடித்தார். இவ்வளவு பிரம்மாண்டமான கட்டிடத்தைக் கட்டி விட்டு, நான் தான் இதைக் கட்டினேன் என்று பெருமை பாராட்டாமல் தன்னையும், இஸ்ரவேல் ஜனங்களையும் தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு அர்ப்பணித்து, கர்த்தர் அந்த ஆலயத்தில் தன்னை வெளிப்படுத்த வேண்டும் என்று விண்ணப்பம் செய்தான் (2 நாளா. 6). கர்த்தர் சாலொமோன் ராஜாவின் தாழ்மையையும், ஜெபத்தையும் கேட்டு தம்முடைய மகிமையை அக்கினியாக ஆலயத்தில் வெளிப்படுத்தினார் (2 நாளா. 7:11).

வாலிபர்களே! இன்றைக்கு கர்த்தர் தம்முடைய மகிமை வெளிப்படுத்த விரும்புகிற ஆலயம் நாமே! இன்றைக்கும் நம்முடைய சரீரமாக இருக்கும் தேவ ஆலயம் எப்படி இருக்கிறது? நம்மிடம் தாழ்மையும், ஜெபமும் மட்டுமல்லாமல் நம்முடைய சரீரமும் தேவனுக்கு முன்பாக உகந்த பலியாக காணப்படும் போது, நம்முடைய வாழ்விலும் தேவ மகிமை வெளிப்படும்.

"சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று" (2 நாளா 7:1).

# மறுரூப மலையில் வெளிப்பட்ட தேவ மகிமை



இயேசு கிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்த காலத்தில், அவரிடத்தில் சுகத்திற்காகவும், அற்புதத்திற்காகவும் திரளான ஜனங்கள் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அப்படி தங்கள் தேவைக்காக மாத்திரம் இயேசுவிடம் வந்தவர்கள் அற்புதங்களை பெற்றுக் கொண்டாலும், இயேசு கிறிஸ்துவின் முழுமையான வல்லமையையும் மகிமையையும் பார்க்கவில்லை. ஆனால் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இயேசுவை பின்பற்றிய சீஷர்கள், இயேசு எங்கு சென்றாலும் அவரை விட்டு விலகாமல் பின்தொடர்ந்தார்கள். அதன் விளைவாக இயேசு தனக்கு நெருக்கமான மூன்று சீஷர்களை மறுரூப மலைக்கு அழைத்துச் சென்று, உயிர்த்தெழுந்த பின்பு தான் பெறப் போகும் மகிமையுள்ள சரீரத்தில் காணப்பட்டு, அவர்களுக்கு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார் (மத். 17:2). இது எல்லாருக்கும் உரிய அனுபவமல்ல, யாரெல்லாம் ஆசையாய் இயேசுவைப் பின்தொடர்ந்து, அவரோடு தனித்திருக்க விரும்புகிறார்களோ, அவர்களுக்கு தம்மை மகிமைப் பொருந்தினவராக வெளிப்படுத்துவார்.

வாலிபர்களே! நாம் எதற்காக இயேசுவை பின்பற்றுகிறோம்? நம் தேவை, ஆசீர்வாதம், சுகம் போன்றவற்றிற்காக மாத்திரம் தேடுகிறோமா அல்லது உண்மையாக அவரைப் பின்பற்றி, அவர் சமூகத்தை எப்போதும் தேடுகிறோமா? யோசித்துப் பாருங்கள்! இயேசுவை உண்மையாக பின்பற்றி, அவரை விட்டு பிரியாமல் இருக்கும் போது, அவர் தம்முடைய மகிமையை விளங்கப்பண்ணுவார்.

''அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று'' (மத். 17:2).

# இனி வெளிப்பட போகும் மகிமை



''ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல...'' (ரோமர் 8:18) என்று பவுல் எழுதுகிறார். ஆம், இனி வரப்போகும் ''மகிமை''. நாம் வாழ்ந்துக் கொண்டிருப்பது கடைசி காலமாக இருக்கிறது. இனி வரும் நாட்களில் தேவனுடைய முழு மகிமையை வெளிப்படுத்த போகிற இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடைபெற போகிறது. முதலாவது, 'எழுப்புதல்' உலகம் தழுவிய எழுப்புதல் கண்டங்களை அசைத்து தேவனுடைய மகிமையை வெளிப்படுத்த போகிறது. இரண்டாவது, இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகை, முதல் முறை இயேசு வந்தபோது, அவருடைய மகிமை குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் விளங்கினது. ஆனால் இம்முறை இயேசு கிறிஸ்து இராஜாதி இராஜாவாக, பூமியை நியாயந்தீர்க்கிறவராக மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வரப்போகிறார் (மத். 24:30). அவர் மகிமையோடு வருவது மட்டுமல்ல, அவரை அறிந்து, உண்மையாக, பரிசுத்தமாக வாழ்ந்து, அவருக்காக காத்திருக்கிறவர்களை தம்முடைய மகிமையில் சேர்த்து, நித்திய ஜீவனையும் தரப்போகிறார். ஆனால் அவரை அறியாதவர்களும், துன்மார்க்கர்களும், பாவத்தை விட்டு மனந்திரும்ப மனதில்லாதவர்களும் பயத்தோடும், நடுக்கத்தோடும் அவரின் நியாயத்தீர்ப்பையும் நித்திய ஆக்கினையையும் அடைய வேண்டியதாயிருக்கும்.

வாலிபர்களே! இதுவரை உலகம் கண்டிராத தேவ மகிமை வெளிப்படுகிற காலத்தில் நாம் வந்திருக்கிறோம். உங்கள் மூலம் இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்த விரும்புகிறார். எனவே உங்கள் தூசியை உதறிவிட்டு எழும்புகள், கிறிஸ்து உங்களை பிரகாசிப்பிப்பார்.

''அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்'' (மத். 24:30).

சாதனை: சுமா






# வலிகள் வழிகளாக மாறின!

வளர்ந்துக் கொண்டிருக்கும் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! ஒவ்வொரு நாளும் நீங்கள் சாதனையாளராக மாற உங்களை நீங்களே செதுக்கிக் கொண்டு இருக்கிறீர்கள் என முழு நிச்சயமாய் நம்புகின்றேன். இன்னும் உங்களை உத்வேகப்படுத்தக்கூடிய சாதனையாளரின் வாழ்க்கைப் பயணம் உங்களுக்காக...



அர்ஜென்டினாவிலுள்ள ரொசரியோ என்ற இடத்தில் ஜூன் 24, 1987 அன்று லியோனல் மெசி (Lionel Messi) ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய சிறுவயதிலிருந்தே கால்பந்தாட்டத்தின் மீது அதிக ஆர்வத்தை வைத்திருந்தார். இவருடைய தந்தை ''சிறு பையன், ஏதோ ஆசைப்படுகிறான் என்று நினைக்காமல் பிறந்து நான்கு வருடமே ஆன தன்னுடைய மகனுக்கு கால்பந்து ஆட எளிமையாக கற்றுக் கொடுத்தார்.''

ஏதோ பொழுதுபோக்கிற்காக விளையாடு கிறோம் என்று எண்ணாமல் சிறு வயதிலேயே தன்னைக் கால்பந்து வீரராக எண்ணி கால்பந்து விளையாட்டில் அதிக ஆர்வத்தைக் காட்டத் தொடங்கினார். ஏழாவது வயதில் Newell's old Boys clubல் இணைந்தார். அடுத்த ஆறு வருடம் கால்பந்து விளையாடின மெஸ்ஸி 500 கோல்கள் அடித்து அசைக்க முடியாத கால்பந்து அணியாக தன்னுடைய அணியை மாற்றினார். தேசிய அணிக்காக விளையாட வேண்டும் என்பதே இவருடைய இலட்சியமாக இருந்தது.




இதற்காக தன்னை முழுவதுமாக தயார் படுத்தத் தொடங்கினார். வாழ்க்கையிலும் எந்தப் பிரச்சனையும் இல்லை, விளையாட்டிலும் இவரை மிஞ்ச யாரும் இல்லை. எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் சந்தோஷமாக இருந்த நேரத்தில் தான், மெஸ்ஸியின் மனநிலையை நிலைகுலைய வைக்கக்கூடிய ஒரு நிகழ்வு நடந்தது. 10ம் வயதில் அவருடைய சரீர வளர்ச்சியில் ஹார்மோன் குறைபாடு (Hormone Deficiency) இருப்பதைக் கண்டறிந் தனர். இந்த நோய் இருப்பதால் இவரால் இனி கால்பந்து விளையாட முடியுமா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்த நோயைக் குணப்படுத்த மாதம் 900 டாலர் செலவிட வேண்டும் என்றனர். நடுத்தரக் குடும்பம் என்பதால் இவ்வளவு பணத்தையும் செலவிட அவர்களால் முடியவில்லை. மெடிக்கல் இன்சூரன்ஸ் மூலம் அப்போதைக்கு மெஸ்ஸியின் மருத்துவச் செலவுகளை பார்க்கத் தொடங்கினார். இந்தச் சிகிச்சை மிகவும் கடினமாகவும் சவாலாகவும் இருந்தது. வாரத்தின் ஏழு நாட்களிலும் அவரது கால்களில் ஊசி போட்டனர். ஒரு வாரம் வலது காலில் ஊசி போட்டால், அடுத்த வாரம் இடது கால் என்று மாற்றி மாற்றி ஊசி போட்டனர். இதனால் தன்னுடைய காலை கீழே வைத்து நடப்பதே

ஒரு சவாலான விஷயமாக இருந்தது. ஆனால் என்ன வலி இருந்தாலும் மெஸ்ஸிக்கு கால்பந்தின் மேலுள்ள ஈர்ப்பை எவராலும் தடுக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும் கால்களில் ஏற்படும் வலி அவரை மிகவும் கலங்கடித்தது. இரவு எவ்வளவு நேரம் வலியினால் துடித்தாலும் காலையில் காலதாமதமின்றி கால்பந்து பயிற்சி மேற்கொள்ளச் சென்று விடுவார். Hormone Deficiency சிகிச்சையை மேற்கொள்வதால் உயர் இரத்த அழுத்தம், உடல் எடைக் கூடுதல், எலும்புகள் பலமில்லாமல் போகும் என எல்லாவித பிரச்சனைகளும் இருக்கும் என டாக்டர்கள் அறிவுறுத்தினர். ஆனால் இந்தப் பிரச்சனைகளையெல்லாம் அவர் ஒரு பொருட்டாக கூட எண்ணவில்லை. ஒரு விஷயத்தை அளவில்லாமல் நேசித்தால் அது என்ன தான் வலி கொடுத்தாலும், வாழ்க்கைக்கு ஒரு உந்துதலாகவே இருக்கும் என்று எண்ணி இன்னும் அதிவேகத்துடன் உழைக்கத் தொடங்கினார். இவரை நோக்கிப் பாயும் ஒவ்வொரு அம்புகளையும் தன்னுடைய வாழ்க்கைக்கு போடப்படும் அடித்தளங்களாக மாற்றினார். கடினமாக உழைத்தார் எனினும் இவருடைய மருத்துவச் செலவுக்கு எந்த ஒரு பணமும் செலவிட முடியாமல் போனது. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இவருடைய குடும்பம் மிகவும் கலங்கியது.



இவர் விளையாடிக் கொண்டிருக்கும் Newell's old Boys club இவருடைய மருத்துவச் செலவுக்கு உதவும் என்றாலும், மெஸ்ஸியின் சிகிச்சைக்கு ஆகும் செலவு இன்னும் அதிகமாக இருந்ததால் இவர்களால் மெஸ்ஸிக்கு உதவ முடியவில்லை. இவருடைய சிகிச்சைக்காக இவரே கால்பந்து விளையாடி அதில் வரும் பணம் மூலமாய் தன்னுடைய சிகிச்சையை மேற்கொண்டார். இந்த நிலையில் தான் பார்சிலோனா அணியில் இருந்து மெஸ்ஸிக்கு அழைப்பு வந்தது. திறமையாக விளையாடிக் காட்டினால் பார்சிலோனா அணியில் சேர்ந்துக் கொள்வதாகவும், மருத்துவச் செலவுகளை பார்த்துக் கொள்வதாகவும் கூறினார்கள் இதனால் Spainக்கு போன மெஸ்ஸி தன்னுடைய திறமையை வெளிக்காட்டினார். இவருடைய ஆட்டத்தைப் பார்த்து வியர்ந்துப் போன ஆட்டத்தின் பொறுப்பாளர் மெஸ்ஸியிடம் ஒரு ஒப்பந்தம் போட முன்வந்தார். அதற்குரிய ஒப்பந்தம் ஒரு வெள்ளை tissue paper-ல் போட்டார்கள். இந்த சின்ன வெள்ளை tissue paper தான் மெஸ்ஸியின் வாழ்க்கையை மாற்றியது.

என்னதான் மெஸ்ஸியின் வாழ்க்கை மாறினாலும் Hormone Deficiency என்ற குறைபாடு இவரைத் தொடர்ந்துக் கொண்டே இருந்தது. இவர் கால்பந்து மைதானத்திற்கு வரும்போதே இவருடைய நண்பர்கள் ''பூச்சி, பூச்சி'' என்று கிண்டல் பண்ணினார்கள் என்னத்தான் கிண்டல் பண்ணினாலும் தன்னுடைய மௌனத்தையே அவர்களுக்கு பதிலாக வைத்து தன்னுடைய வேகத்தை விளையாட்டில் காட்டத் தொடங்கினார். மெஸ்ஸி தன்னுடைய வாழ்க்கையில் சந்தித்த அவமானங்கள், கிண்டல்கள், போராட்டங்கள் அனைத்துமே Goalஆக மாற்றிக் கொண்டே இருந்தார். இவருடைய குறைபாட்டை மன வலிமையாய் ஜெயித்துக் காட்டினார். தன்னுடைய பலவீனத்தையே தன்னுடைய பலமாக மாற்றிக் கொண்டார். ஒவ்வொரு விளையாட்டிலும் Goal அடிக்காமல் இருந்ததில்லை. ஆறுமுறை பாலன்டி ஓர் (Ballond'Or) விருதை வென்று உலகின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரராக மாறினார். இன்று Lionel Messi என்றால் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

யாரும் வெற்றியை மிக எளிதாக சுவைப்பது இல்லை. ஒவ்வொரு கசப்பான அனுபவத்தின் வழியாக சென்று தான், வெற்றிக் கனியை சுவைத்திட முடியும். இந்த வருடம் முழுவதும் நீங்கள் அநேக போராட்டங்கள், தோல்விகளை சந்தித்திருக்கக் கூடும். இருந்தாலும் நடந்ததை நினைத்து வருந்துவதைவிட உங்களுக்கு என்று ஒரு Goal நியமிக்கப்பட்டு இருக்கிறது என்று எண்ணி, புதிய வருடத்திற்குள் நுழையுங்கள்! சாதனைப் படைக்க வாருங்கள்! ●

# வேதாகமம்
## புதையல் வேட்டை

புதிர்: ரேச்சல்

**கீழே வேதத்தில் யாருக்கு எங்கே எப்போது தூதர்கள் தரிசனமானார்கள் என்று கண்டறிந்து, சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

*வினாக்கள்*

1. தேவதூதன் சிறைச்சாலையின் கதவுகளை யாருக்குத் திறந்து விட்டான்?
2. எத்தியோப்பிய மந்திரியை சந்திக்க யாரை தேவதூதன் அனுப்பினான்?
3. தேவதூதன் அடித்ததால் புழுபுழுத்து செத்தவன் யார்?
4. ஜெபம் பண்ணும்போது தேவதூதனைக் கண்டவன் யார்?
5. 'தேவன் உனக்கு தயவுப்பண்ணினார்' என்று தூதன் யாரிடம் சொன்னான்?
6. தூதன் உருவின பட்டயத்தோடு எந்த மிருகத்தின் மேல் நின்றான்?
7. அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய், யார் தூதனுக்கு முன்பாக நின்றான்?
8. தேவதூதன் தூபத்தின் வலப்பீடத்தில் நின்று யாருக்கு தரிசனமானான்?
9. வானத்திலிருந்து தூதன் தோன்றி யாரை பலப்படுத்தினான்?
10. ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வது யார்?

### கடந்த மாத விடைகள்

1 யோனா (யோனா 4:11)
2 ஆதாம் (ஆதி. 3:9)
3 காயீன் (ஆதி. 4:9)
4 யோபு (யோபு 40:2)
5 சாத்தான் (யோபு 2:2)
6 மரியாள் (யோவான் 20:15)
7 ஆமோஸ் (ஆமோஸ் 7:8)
8 மோசே (யாத். 4:2)
9 எருசலேம், யூதா (ஏசாயா 1:5)
10 யோபு (யோபு 38:28)

கடந்த மாத வெற்றியாளர்

**அபிஷா**
**கல்குளம்**


**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**Jesus Redeems Youth Ministries,**
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353333
youth@jesusredeems.org

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15.12.2021**

# வேதமும், விஞ்ஞானமும்!




நிகழ்வு: ஜ்லியட் கிளார்லின்

**மனிதன் உருவானது எப்படி? (HOW MAN CREATED?) பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டது போல, ''தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி,...'' (ஆதி. 2:7) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனிதன் மண்ணினால் உண்டாக்கப் பட்டவன் என்பது நமக்கு தெளிவாக்கிறது.**

## இதற்கு அறிவியல் அறிஞர்கள் கூறும் கருத்துக்களை நாம் தொடர்ந்து காண்போம்...



படைப்புகளில் மிகசிறந்த படைப்பு மனித சமூகமே என்பது மறுக்க முடியாதது. காரணம் ஒன்றை வைத்து வேறு ஒன்றை புரிந்து கொள்ளும் பலவித ஆற்றல் மனிதனுக்கு மட்டும் தான் உண்டு. **மனிதன் மண்ணிலிருந்து படைக்கப்பட் டவனானதால் அவனது உடலை வெட்டி பார்த்தால் மண் கிடைக்குமா?** என்பது சில மனிதர்களின் கேள்வியாக உள்ளது. இக்கேள்விக்கான பதில் என்னவென்றால், மண்ணில் காணப்படும் மூலப்பொருட்கள் மனிதனது சதைகளில் விஞ்ஞான அறிஞர்களால் அதிகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



ஜான் நம்ஸ்லே எழுதியுள்ள புத்தகத்தில் மனித உடலின் மூலப்பொருட்கள் பற்றிய ஆய்வுத் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சராசரியாக 70 கிலோ கிராம் எடையுள்ள மனித உடலில் ஆக்ஸிஜன் ($O_2$), பாஸ்பரஸ் (P), சோடியம் (Na), அயோடின் (I), தோரியம் (Th) போன்ற 58 வகையான தனிமங்கள் உண்டு. இவற்றில் ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் போன்ற வாயுக்களைத் தவிர, மற்றத் தனிமங்கள் அனைத்தும் மண்ணிலிருந்து கிடைத்தவை மண்ணோடு மீண்டும் கலப்பவை என்பது தான் முற்றிலும் உண்மையானது என்று நமக்குத் தெளிவாகிறது. அதுமட்டுமல்ல, நாம் எதை எல்லாம் உணவாக உட்கொள்கின்றோமோ அவை அனைத்துமே நாம் வாழும் இந்த மண்ணின் சத்துக்களாகத்தான் உள்ளன.

எனவே, மனிதன் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டான் என்பது இக்கால அறிவியல் அறிஞர்களால் முற்றிலும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். இதனையே நம் பரிசுத்த வேதாகமம் நமக்கு முன் அறிவித்துள்ளது. எனவே, பரிசுத்த வேதாகமத்தைக் காட்டிலும் சிறந்த புத்தகம் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்பதே சத்தியம்.



**இப்பொக்கிஷமாகிய வேதாகமத்தை நாம் அனுதினமும் வாசிப்போம்! தியானிப்போம்! அப்பியாசிப்போம்!●**



# இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

## சுவிசேஷம் அறிவித்தலும் இயேசுவின் இரண்டாம் வருகையின் முடிவும்!

எச்சரிப்பின் செய்தி: சதீஷ்

இயேசு தன்னுடைய சீஷர்களிடம் அவருடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் முன்பாக நடக்கும் அடையாளங்களை ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டு வரும்போது, திடீரென நிறுத்தி **''ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்'' (மத். 24:14)** என்றார். கடலில் தன் உயிரை தத்தளிக்கும் ஜனங்களை தங்களால் முயன்ற அளவிற்கு கரைச் சேர்த்தனர். கரையில் இருக்கும் அநேக ஜனங்கள் இதைப் பார்த்தும் தன்னுடைய சொந்த வேலைகளைச் செய்து கொண்டும், கரை சேர்க்கும் ஜனங்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டும் இருந்தனர். கிறிஸ்தவ உலகம் இன்றைக்கு இப்படித்தான் இருக்கிறது. பாவம் என்ற கடலில் சிக்கித் தவிக்கும் திரளான ஜனங்களை





காப்பாற்றிக் கொள்ள தத்தளித்துக் கொண்டிருக்கும் ஜனங்களைக் கண்ட ஒருவர் அவர்களைத் தேடிப் போய் காப்பாற்றி கரையேற்றினார். இப்படி பல்லாயிரக்கணக்கான ஜனங்களை அவர் கரையேற்றுவதைக் கண்ட ஒரு சிலர் அவருக்கு உதவி செய்யும்படி அவருடன் இணைந்து, கடலில் இயேசு தேடிச் சென்று அவர்களை இரட்சித்து கரையேற்றிக் கொண்டு இருக்கிறார். தெரிந்து கொள்ளப்பட்ட சிலரே இயேசுவின் பாரத்தை புரிந்துக் கொண்டு அவருடன் இணைந்து, பாவ சேற்றில் இருக்கும் ஜனங்களை இயேசுவுக்கு நேராக கரை சேர்த்து கொண்டு இருக்கின்றனர். ஆனால்

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட அநேகர் வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இயேசுவோடு இணைந்து அவரை அறிவித்து பாவத்திலும் ஆபத்திலும் இருக்கும் ஜனங்களை மீட்டெடுப்பவர்கள்தான் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டனர். இரட்சிக்கப்பட்ட எல்லோரும் சீஷர்களாக மாற வேண்டும் என்பதே இயேசுவின் கட்டளை. **''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள்'' (மத். 28:19)** என்றார். சீஷர்களாக மாற வேண்டிய பலர், இன்று விசுவாசிகளாகவே இருப்பது வேதனையாகவே உள்ளது. இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிற நீங்கள் எதையும் எதிர்பார்க்காமல் சுவிசேஷத்தை அறிவிக்கும் இயேசுவின் சீஷனாக இருக்கிறீர்களா? அல்லது ஏதாவது ஒன்றை இயேசுவிடம் எதிர்பார்த்து வேடிக்கை பார்க்கும் விசுவாசியாக உள்ளீர்களா? சிந்தித்துப் பாருங்கள். **''...சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ'' (1 கொரி 9:16)** என்று வேதம் சொல்கிறது. தன் பாவத்தை விட்டு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்ட எல்லோரும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும், இதுவே இரட்சிக்கப்பட்ட எல்லோர் மேலும் விழுந்த கடமை என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். சுவிசேஷம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்பட்டவுடன் முடிவு வரும் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. முன்பு இருப்பதைக் காட்டிலும் இன்று கடைசிக் காலத்தில் சிறுபிள்ளைகள், வாலிபர்கள், பெரியோர் என்று பலரும் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிக்க ஆரம்பித்துள்ளனர். நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்? மத்தேயு 24ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட அடையாளங்கள் இயேசு சீக்கிரமாய் வரப்போகிறார் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. ஆனால் சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது உலகத்தின் முடிவுக்கு அடையாளம்.



**தன் பாவத்தை விட்டு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்ட எல்லோரும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்,**

*எனக்கன்பான வாலிபர்களே! நீங்கள் முழுநேரமாய் வந்து இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஒருவேளை உங்களுக்கு முழு நேர அழைப்பு இருந்தால் முழு நேரமாக வந்து ஊழியம் செய்யலாம். இல்லையென்றால் நீங்கள் படிக்கும் பள்ளி, கல்லூரி, வேலை ஸ்தலங்களில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை கட்டாயம் நீங்கள் அறிவித்தே ஆக வேண்டும். ''...சுவிஷேகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'' [2 தீமோ. 4:5] சுவிசேஷம் அறிவிக்கும் இராஜாவின் வேலை அவசரம், இமைபொழுதும் வீணடித்து விடக்கூடாது. நீங்கள் ஒவ்வொரு நாளும் ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை பிரசங்கித்து, ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள் இதுவே உங்கள் மேல் விழுந்த கடமையாகும்''. சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவித்தப் பின்பு கிறிஸ்துவின் அரசாட்சி வரும், அவர் தன் இராஜ்யத்தை ஸ்தாபிக்க வருவார். நாம் எல்லோரும் அவருடன் இருப்போம் ●*



# ஜெபக்கையேடு

ஜெபம்: எஸ்தர்

## டிசம்பர் 2021

1 இந்தியாவில் 14 வயதுகுட்பட்ட 7.9%, சிறுவர்கள் புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்போர் சுகமடையவும், இனியும் சிறுவர்களை புற்று நோய் தாக்காதபடிக்கும் ஜெபிப்போம்.

2 புகையிலைப் பொருட்களை பயன்படுத்தியதினால் பாதிக்கப்பட்டுள்ள 48.7% பேர் புகையிலை பொருட்களை நிறுத்தவும், அது தீமையானது என்பதை உணர்ந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

3 புகையிலைப் பொருட்களை பயன்படுத்துவதால் இந்தியாவில் 6 மணி நேரத்திற்கு ஒருவர் வாய்ப் புற்று நோயால் இறக்கின்றனர். புகையிலைப் பொருட்கள் தடைசெய்யப்பட ஜெபிப்போம்.



4 உலக பட்டினி குறியீட்டில் 116 நாடுகளில் இந்தியா 101வது இடத்துக்கு சரிந்துள்ளது. பட்டினியால் வாடுவோருக்கு உணவுகள் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

5 உணவுகள் வீணடிக்காமல் பாதுகாக்கப்பட்டு, பசியால் வாடுவோருக்கு சரியாக கிடைக்க ஜெபிப்போம்.



6 பசிக் கொடுமையால் பல ஆயிரம் மக்கள் உயிரிழந்து வருகிறார்கள். உயிரிழப்புகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

7 பசிக் கொடுமையால் அநேகர் குடும்பமாக தற்கொலை செய்து மரிக்கிறார்கள். இந்த அவல நிலை நம் தேசத்தை விட்டு ஒழிய ஜெபிப்போம்.

8 இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் சுமார் 20 கோடி பேருக்கும், ஊட்டச்சத்துள்ள உணவுகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.




9 சர்வதேச அளவில் 10 முதல் 19 வயதுகுட்பட்ட இளம் பருவத்தினரில் 7-ல் ஒருவருக்கு மனரீதியான பாதிப்பு ஏற்படுவதாக யூனிசெப் ஆய்வு கூறுகிறது. இளம் தலைமுறையினர் மத்தியில் காணப்படும் பாதிப்புகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

10 ஆண்டுதோறும் 46 ஆயிரம் பேர் தற்கொலை செய்வதாக அறிக்கை கூறுகிறது. தற்கொலையைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.



11 உலகம் முழுவதும் சுமார் 160 கோடி பேரின் கல்வி பாதிக்கப்பட்டதால், மனதளவில் பாதிக்கப்பட்ட இளம் வயதினரின்

மனநிலைகளில் மாற்றம் உண்டாகவும், அவர்கள் தங்கள் பழைய நிலைக்கு திரும்பவும் ஜெபிப்போம்.

12 இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 20 பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் மரணமடைவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

13 ஒரு மணி நேரத்துக்கு ஒரு பெண் வரதட்சணைக் கொடுமையால் மரணமடைகிறார்கள். வரதட் சணைக் கொடுமை தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

14 உலக அளவில் நடைபெறும் மூன்று குழந்தை திருமணங்களில் ஒன்று இந்தியாவில் நடைபெறு கிறது. இவை தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

15 அதிகமாக பீகார், ஜார்கண்ட், உத்திரபிரதேசம், மேற்கு வங்கம், தெலுங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலுள்ள ஜனங்களுக்குள் விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.

16 கடந்த 10 ஆண்டுகளில் 2.50 கோடி பெண் குழந்தைகளுக்கு திருமணங்கள் நடைபெற்றுள்ளது. பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

17 ஒவ்வொரு ஆண்டும் 1.2 கோடிக் குழந்தைகள் திருமணத்தால் மனதளவில் பாதிக்கப்படுவதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

18 இந்தியாவில் தினமும் சராசரியாக 80 கொலைகள் நடைபெறுவதாக என்.சி.ஆர்.பி தகவல் குறிப்பிட்டுள்ளது. கொலைகள் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

19 ஒரு ஆண்டில் மட்டும் 29 ஆயிரத்து 193 பேர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட் டுள்ளது. கொலை செய்யத் தூண்டுகிற ஆவிகள் கட் டப்பட ஜெபிப்போம்.

20 கொலை வழக்கில் கொல்லப்பட்டவர்களில் 38.5% பேர் 30 முதல் 45 வயதுள்ளவர்கள், 35.9% பேர் 18 வயது முதல் 30 வயதுள்ளவர்கள். இளம் வாலிபர்களை குறிவைத்து கொலை செய்யத் தூண்டும் ஆவிகளைக் கட்டி ஜெபிப்போம்.

21 கொலை வழக்கில் சிக்கி சிறைச் சாலைகளில் இருக்கும் நபர்கள் தவறை உணர்ந்து மனந்திரும்பி, விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

22 நாடு முழுவதும் சுமார் 1 கோடியே 86 லட்சத்து 44 ஆயிரம் பேர் போதை வஸ்துக்கள், மாத் திரைகளை பயன்படுத்துகிறவர்கள், அதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

23 தமிழகத்தில் 1 லட்சத்து 54 ஆயிரம் பேர் போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருப் பவர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

24 நாடு முழுவதும் மதுபழக்கத்திற்கு அடிமைப்பட் டிருக்கும் 15 கோடியே 1 லட்சத்து 16 ஆயிரம் பேர் இதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

25 அதிகபட்சமாக உத்திரபிரதேசத்தில் மதுபழக்கத் திற்கு அடிமையாகியுள்ள 3 கோடியே 86 லட்சத்து 11 ஆயிரம் பேர் இதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

26 நாடு முழுவதும் மதுபழக்கத்தில் சிக்கியிருக்கும் 18 வயது முதல் 25 வயதுக்குட்பட்ட வாலிபர்கள் இதிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

27 நாடு முழுவதும் இதைக் குறித்த விழிப்புணர்வு வாலிபர்களுக்குள் உண்டாக, விழிப்புணர்வு மையங்கள், மறுவாழ்வு மையங்கள் அமைக்கப்பட ஜெபிப்போம்.

28 நாடு முழுவதும் கஞ்சாப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் 2 கோடியே 90 லட்சம் பேருக்கும் ஒரு மாற்றம் உண்டாகி, சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக சிறந்து விளங்க ஜெபிப்போம்.

29 இந்தியாவில் உள்ள 135 நிலக்கரி சுரங்கங்கள் மூலம் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட ஜெபிப்போம்.

30 மின் உற்பத்தி நிலையங்களில் மிகக் குறைந்த அளவு நிலக்கரி கையிருப்பதால் இந்தியாவில் மின் நெருக்கடி ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மின்சாரம் தங்கு தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

31 மின்சாரம் வீணாக்காமல், சரியான முறையில் மக்கள் பயன் படுத்தி மின் சாரத்தை சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாருடைய இருதயத்திலும் உண்டாக ஜெபிப்போம்.



சிறப்பு கட்டுரை: ரவி

# கிறிஸ்தவத்தின் சிறப்புகள்



## தேவன் எனக்குள்ளே...

என் அன்புக்குரிய வாலிப தம்பி மற்றும் தங்கைகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! கடந்த சில மாதங்களாக, கிறிஸ்தவத்தின் சிறப்புகள் என்ற தலைப்பில் ஒருசில சிறுகட்டுரைகளை நாம் பார்த்து வந்தோம். அந்த வரிசையில், இவ்வாண்டின் கடைசி கட்டுரையாக, ‘‘தேவன் எனக்குள்ளே’’ (God in me) என்கிற தலைப்பை ஆராய்வோம். தலைப்பைப் படிக்கும்போதே ஒரு ஆர்வத்தோடுக் கூடியக் கேள்வியை பலருடைய உள்ளத்திலும் எழுப்பும் ஒரு தலைப்பு இது.



வேதத்தில் இயேசுவுக்கு இம்மானுவேல் என்ற ஒரு பெயர் இருப்பதாக ஏசாயா புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று பொருள். ஆனால் இக்கட்டுரையில் இன்னும் மகிமையான கிறிஸ்தவத்தின் ஓர் சிறப்பான ‘‘தேவன் நமக்குள்ளே’’ என்பதனைக் குறித்து ஆராயப் போகிறோம்.

### தேவன் எப்பொழுது நமக்குள் வருகிறார்?

வேதத்தில், **‘‘மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்’’ (யோவான் 3:6)** என்று சொல்கிறது. இதுபோல, **‘‘ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின’’ (2 கொரி. 5:17)** என்று சொல்கிறது. இவ்வசனங்களின் அடிப்படையில், மாம்சத்தில் தாய்–தகப்பன் மூலமாக பூமிக்கு நாம் வருகிறோம். பாவத்தின் ஆளுகைக்குட்பட்டு பாவத்தில் வாழ்ந்த நாம், இயேசு கிறிஸ்துவை கர்த்தராகவும், சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும் அந்த நொடியில் நாம் தேவனால் மறுபடியும் பிறந்தோம். இந்த மறுபிறப்பு தேவனால் நடந்தது.

### தேவன் எப்படி நமக்குள் வருகிறார்?

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று பரிமாணங்களில் இருக்கும். நம்முடைய ஜீவனுள்ள மெய்யான தேவன், பரிசுத்த ஆவியானவராக பாவத்துக்கு மரித்துபோய் தேவ உணர்வற்றவர்களாய் இருந்த நம்மை மறுபடியும் உயிர்பித்தார். மரித்து, செயலற்று இருந்த நம்முடைய ஆவியை தம்முடைய ஆவியால் உயிர்பித்தார். அப்படியென்றால், தேவனுடைய ஆவியானவர் நமக்குள் வந்து தானே நம்மைப் மறுபடியும் பிறப்பிக்கக்கூடும்? ஆம் நண்பர்களே! அவர் ஆவியானவராக நமக்குள் வந்து தான் நம்மை பிறப்பித்தார். இதற்கான ஓர் நல்ல உதாரணத்தை நான் சொல்லும்போது, இந்த சத்தியம் மிகத் தெளிவாக உங்களுக்கு விளங்கும். மருத்துவமனையில் மூச்சுப்பேச்சு இல்லாமல் கொண்டுவரப்படுபவர்களுக்கு, அவசர சிகிச்சையாக மருத்துவர்கள் செய்யும் முதல் காரியம், தங்களுடைய சுவாசக் காற்றை அவர்களுடைய



வாயின் மூலமாக உள்ளே செலுத்தி நின்றுப் போயிருக்கும், அவர்களின் இருதயத்தைச் செய்படச் செய்வார்கள். இந்த மருத்துவ முறைக்கு ஆங்கிலத் தில் CPR (Cardiopulmonary Resuscitation) என்று பெயர்.

என் அன்பு வாலிபர்களே, நமக்கும் இந்த CPR முறை போலவே, அன்பான தேவன் தமது ஜீவனைத் தந்து, பாவத்தில் மரித்திருந்த நம்மை உயிர்ப்பித்தார். தேவனுடைய அன்பை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அவருடைய அன்பு எத்தனை ஆச்சரியம்! உலகத்தில் வேறெந்த மதத்திலும் இல்லாத ஓர் பெரும் சிறப்பு இது. அசாதாரணமான மறுபிறப்பு! மற்றெல்லா மதங்களிலும் தங்கள் புறத்தை தண்ணீரால் சுத்தம் செய்து விட்டு தேவனிடம் வருவார்கள்.



## தேவன் ஏன் நமக்குள் வருகிறார்?

சுருக்கமான பதில்: நமக்குள், நம்மோடு வசிப்பதற்காக பொதுவாக, தேவன் வாசம் செய்யும் இடத்தை கோவில் அல்லது தேவாலயம் என்பார்கள். குறிப்பாக, இந்து சமயத்தினரை நீங்கள் உற்றுப் பார்த்தால், அவர்கள் தங்கள் கோவில்களை மிகவும் சுத்தமாக, துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அனுதினமும் முயற்சிப்பார்கள். கல்லும் மண்ணும் கொண்டு உருவாக்கப்பட்ட கோவில்களை சுத்தமாக பராமரிக்க அவர்கள் எத்தனைப் பிரயாசப்படுகிறார்கள் என்று பாருங்கள். அதற்கு காரணம் தேவன் பரிசுத்தமானவர் என்றும் அவர் பரிசுத்தத்தில் வாசம் செய்கிறவர் என்கிறதுமான உணர்வு எல்லா மனிதர்களுடைய உள்ளத்திலும் இயல்பாகவே இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய தேவன், கல்லால் உருவாக்கப்பட்ட கோவில்களில் வாசம் செய்ய விரும்புவதில்லை. ஆகவேதான், 1 கொரிந்தியர் 6:19ல் சொல்லியிருக்கிறது போல, நாம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறோம். ஆம் நண்பர்களே, அவர் தம்முடையஆவியினால் நம்மை மறுபடியும் பிறப்பித்தது மாத்திர மல்லாமல், நமக்குள்ளே நிரந்தரமாக வசிக்கப் பிரியப்படுகிறார். பரிசுத்தம் நிறைந்த தேவன் நமக்குள் வசிக்கும்போது நம்மையும் அவர் பரிசுத்தமாக்குவார்.

*ஆம் வாலிபர்களே! அனுதினமும் பரிசுத்தமாக வாழும் வாழ்க்கையைதான் தேவன் விரும்புகிறார். அத்தகையப் பரிசுத்தத்தை நாம் நம்முடைய சுயபலத்தினாலோ, சொந்த முயற்சியினாலோ செயல்படுத்த முடியாது. நமக்கு தேவபெலன் அவசியம். ஆகவே தான், அவர் நமக்குள் வந்து, வசித்து, அனுதினமும் நம்மை பரிசுத்தப்படுத்தி கிறிஸ்துவின் பரிசுத்தமான மணவாட்டியாய் நம்மை மாற்றும்படி நமக்குள் வாழ்கிறார். முழு பிரபஞ்சத்தையும் உருவாக்கின சர்வ வல்லமையுள்ள தேவாதி தேவனுடைய ஆலயமாக திகழ்வது எத்தனைச் சிறப்பு. இது கிறிஸ்தவத்தின் தனிச் சிறப்பு●*

## மழைக்கால நோய்களைத் தடுக்க...

- ☐ மழைக்காலத்தில் அதிகமாக நோய் பரவும் என்பதால் குடிநீரை கொதிக்க வைத்து வெதுவெதுப்பான சூட்டில் குடிக்கவும்
- ☐ உணவு சாப்பிடுவதற்கும் முன்பும் பின்பும் கைகளை நன்றாக கழுவவும்
- ☐ வெளியே செல்லும்போது கட்டாயம் காலணிகளை (சப்பல்கள்) அணிந்து செல்லவும்
- ☐ வெளியே சென்று வந்தவுடன் கை, கால்களை நன்றாகக் கழுவுங்கள்
- ☐ சூடான உணவுகளை சாப்பிடுங்கள்
- ☐ அடிக்கடி குளிர்ந்த நீரை பயன்படுத்தாதீர்கள்
- ☐ ஈ மொய்த்த உணவுப் பொருட்களை சாப்பிடாதீர்கள்
- ☐ வீட்டின் பக்கத்தில் தண்ணீர் தேங்க விடாதீர்கள்.

# கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

இயேசு பிறந்த நாளை உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் தினமாகக் கொண்டாடி வருகிறோம். கிறிஸ்துமஸ் தினத்தை குடும்பத்தோடு, நண்பர்களோடு எப்படி கழிப்பது...

### நேரம் ஒதுக்குங்கள்

கிறிஸ்துமஸ் அன்று காலையில் எழுந்தவுடன் குடும்பத்தாருடன் உட்கார்ந்து கிறிஸ்துமஸின் அர்த்தத்தை பிள்ளைகளுக்கு எடுத்து சொல்லுங்கள். கடந்த வருடத்தில் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.

### ஜெபம் செய்யுங்கள்

கிறிஸ்துமஸ் நாளில் காலை முதல் மாலை வரை நிறைய சேவைகள் செய்யலாம். ஆனால் கிறிஸ்து மஸ் ஆராதனைக்கு சென்று தேவனை ஆராதித்து, மற்றவர்களுடன் வாழ்த்துக்களை சொல்லி வரலாம். முக்கியமாக கிறிஸ்து பிறப்பின் உண்மைத்துவத்தை அறிந்து உங்கள் வாழ்வில் நடைபெற்ற நன்மையான காரியங்களை நினைவுகூர்ந்து ஜெபியுங்கள்.



### குடும்பம் மற்றும் நண்பர்களுடன் நேரத்தை செலவிடுங்கள்

கிறிஸ்துமஸ் என்பது குடும்பத்திற்கான நேரம். எனவே உங்களுக்கு நெருங்கியவர்கள், நண்பர்களுடன் அந்த நாளை செலவிடுங்கள். கஷ்டமான சூழ்நிலையில் அல்லது தனியாக இருக்கும் நபர்களைப் பற்றி தெரிந்தால் அவர்களோடு நேரம் செலவிடுங்கள்.

### பரிசுக் கொடுங்கள்

பெறுவதைவிட கொடுப்பது தான் மகிழ்ச்சியை தரும். எனவே 5 பேருக்கு உணவு சமைத்து அல்லது வாங்கிக் கொடுத்து பசியைப் போக்கலாம் அல்லது உங்களால் முடிந்த பரிசுப் பொருட்களை வாங்கி கொடுங்கள், அதற்காக கடன் வாங்கி செய்யாதீர்கள்.

### அன்பைப் பகிருங்கள்

கிறிஸ்துமஸ் நாளில் இயேசுவின் அன்பை அறிவியுங்கள். இனிப்புகளைப் பகிர்ந்து கொடுத்து இயேசு பிறப்பின் மேன்மையை சொல்லலாம். தனிமையில் இருப்பவர் களோடு அன்பாக பேசுங்கள். முடிந்தால் அடிக்கடி சென்று அவர்களை விசாரியுங்கள்.

### ஏதாவது ஒன்றை ஆரம்பியுங்கள்

குடும்பமாக கிறிஸ்துமஸ் பாடல்களை பாடலாம். குழந்தைகளை இசைக் கருவிகள் வாசிக்க வைத்து உற்சாகப்படுத்தலாம். ஏதாவது ஒரு புதிய காரியத்தை ஆரம்பித்து அதை நடைமுறைப்படுத்துங்கள். அது வாழ்நாள் முழுவதும் உங்கள் நினைவுகளில் தங்கியிருக்கும்●

# எழுப்புதலை

## பரவச் செய்வோர் முகாம் – 2021

### கர்நாடகா மாநிலம்

எழுப்புதலில் 7 விதமான யௌவன சந்ததியை எழுப்புவேன் என்று கர்த்தர் கொடுத்த வாக்கின்படியே தமிழ்நாடு, கிழக்கிந்திய மாநிலம், வடஇந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வாலிபர்களுக்கென்று பிரத்யேகமாக எழுப்புதலை பரவச்செய்வோர் முகாம் நடத்த தேவன் கிருபை செய்தார்.

கடந்த நவம்பர் மாதம் 2ம் தேதி முதல் 4ம் தேதி வரை கர்நாடகா மாநிலத்திலிருந்து 1200க்கும் அதிகமான வாலிபர்கள் நாலுமாவடிக்கு வந்து பயிற்சி பெற்று எழுப்புதல் அக்கினியை சுமந்து சென்றார்கள். கர்நாடகா மாநிலத்தின் எழுப்புதலுக்காகவும், தேசத்தின் எழுப்புதலுக்காவும் ஜெபிக்கும் ஜெப அபிஷேகத்தைப் பெற்று கடந்து சென்றனர்.

சகோதரர் மோகன் சி. லாசரஸ் மற்றும் சகோதரர் வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் பயிற்சி கொடுத்து அனுப்ப தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!










உண்மை சம்பவம்: வயலா



# மௌன யுத்தம்

சத்திரக்காரன் - 9

யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்கு குடிமதிப்பு எழுதும்படி யோசேப்பு–மரியாள் தம்பதியினர் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து பயணிக்கின்றனர். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில் மரியாளுக்கு பிரசவகாலம் நேரிட்டது. சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள் (லூக்கா 2:7) என்று வேத வசனம் கூறுகிறது. இங்கு சத்திரம் என்று சொல்லப்படும் பயணிகள் தங்கும் இடத்தில், யோசேப்பு–மரியாள் தம்பதியினருக்கு இடமில்லை என்று சொன்ன நபரே சத்திரக்காரன் என்று இங்கு கூறப்படுகிறார்.



ஒவ்வொரு செயலை செய்யும் முன், ஒவ்வொரு மனிதனுக்குள் இதை 'செய்யலாம்' என்றும் 'வேண்டாம்' என்றும் இருவித குரல்கள் மனதினுள் ஒலிக்கும். இதையே 'மௌன யுத்தம்' என்று இந்தப் பகுதியில் நாம் காண்கிறோம். இந்த யுத்தத்தில் வேத வசனத்தைக் கைக்கொண்டு தேவனுக்கு பிரியமாய் வாழ விரும்பும் மனிதன் நற்மனசாட்சியோடு நல்ல முடிவை தீர்மானித்து செயல்படுத்துகிறான். ஆனால் சில வேளைகளில் சில மனிதர்கள் நல்ல முடிவை தான் எடுக்கிறோம் என்று கருதி அறியாமல் துர்மனசாட்சியின் ஆலோசனைப்படி தீர்மானிக்கின்றனர். இவ்வாறு பல வேத கதா பாத்திரங்களைக் குறித்துக் கடந்த மாதங்களில் தியானித்தோம். இந்த மாதத்திலும்கூட சத்திரக்காரன் மனதில் மௌன யுத்தம் எவ்வாறு நடந்து இருக்கும் என்ற கற்பனைக் காட்சியை கீழ்க் காண்போம்.

**குரல் 1:** நிறைமாத கர்ப்பிணியோடு தங்க இடம் வேண்டி வந்திருக்கும் இந்த மனிதனுக்கு இடம் இல்லை என்று சொல்லவே மனதிற்கு வருத்தமாகத் தான் இருக்கிறது. என்ன சொல்வது?

**குரல் 2:** இவர்களுக்கெல்லாம் இடம் கொடுத்தால் என் சத்திரமே தீட்டாகி விடும். யாரைப் பற்றி எனக்கு என்ன கவலை?

**குரல் 1:** ஏதாவது ஒரு அறையை மட்டும் ஆயத்தம் செய்து கொடுக்கலாமா?

**குரல் 2:** வேண்டாம். வேண்டாம். மற்ற பயணிகளுக்கு இடையூறாக இருக்கும். யாருக்காவது தெரிந்து விட்டால் எனது தொழில் பாதிக்கப் படுமே.

**குரல் 1:** ஆனால்... இந்த மனிதன் நம்முடைய ஊரான் அல்லவா? நானே இரக்கம் பாராட்டா விட்டால்... வேறு யார் உதவக் கூடும்?

**குரல்2:** குடிமதிப்பு எழுதப்படும் இந்த சூழ்நிலையில், அநேகர் தங்களது சொந்த ஊருக்கு வருவார்கள். எனவே இதுவே வருமானம் ஈட்ட சரியான வேளை. மற்றவர்கள் நலனைக் கருதினால் என்னுடைய சம்பாத்தியம் குறைந்து விடுமே.

**குரல் 1:** ஒதுக்குப்புற அறையை கொடுக்கலாமா?

**குரல் 2:** இல்லை... இல்லை நான் நியாயப் பிரமாணத்தை கைக்கொள்கிறவன். பாரம் பரியத்தை மீறக்கூடாது. இவர்களுக்கு உதவினால், பரிசேயர், சதுசேயர் மற்ற யூதர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எதற்கு வம்பு? பயணிகள் வருவார்கள், போவார்கள். மற்றவர்களைக் குறித்து நான் ஏன் வருந்த வேண்டும். சத்திரத்தில் இடம் இல்லை என்றே கூறி விடு வேன். அதுவே எனக்கும் என் தொழிலுக்கும் நல்லது.



இவ்வாறு சத்திரக்காரர் தன் மனதில் சிந்தித்து இருக்கலாம். சந்திரத்தில் இயேசு பிறப்பதற்கு இடமில்லை என்று சொல்வதற்கு பல முக்கிய காரணங்கள் அவரது எண்ணத்தில் தோன்றி இருக்கலாம். ஆனால் அவரது வாழ்வில் அவருக்கு கிடைத்த மிக முக்கிய தருணத்தில் அவர் சரியான தீர்மானம் எடுக்க வில்லை என்பதே அறியப்படுகிறது. ஆனால் மகிமையின் தேவன் பூமியில் பிறந்த மாட்டுத் தொழுவம், இன்றும் பல நூற்றாண்டுகளைக் கடந்து, பல கோடி மக்களால் வாஞ்சையோடு சென்று பார்க்கப்படும் மகிமையான தேவாலயமாக காணப்படுகிறது. சாதாரணமாக இருந்த மாட்டுத் தொழுவம் இயேசுவுக்கு இடம் கொடுத்ததினால் மகிமையாய் மாறிற்று.

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிப மகனே, மகளே! இயேசுவுக்கு உங்கள் வாழ்வில் இடம் உண்டா? கைப்பேசியோடு, நண்பர்களோடு உலகப் பிரகாரமான காரியத்திற்கு செலவழிக்கும் நேரம் அதிகமா? இயேசு பிறந்ததினால், எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டானது, பூமியில் சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டானது. இன்றும் இயேசுவுக்கு இடம் கொடுத்தவர்கள் வாழ்வில் பாவ இருள் விலகி, பரம சந்தோஷமும், பூரண சமாதானமும் உண்டாகிறது. அநேக வாலிபர்கள் இயேசுவை வாசற்படியிலே நின்று கதவைத் தட்ட வைத்துக் கொண்டிருக்கின்றனர். வேதம் சொல்கிறது, "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே" (சங்கீதம் 24:8,9). அந்த மகிமையின் ராஜா உங்களுக்குள் பிரவேசிக்கும்போது உங்கள் வாழ்க்கையே மகிமையாய் மாறும் ●**

இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

சத்தியம் TV சனிக்கிழமை 6:30am

7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547



# சாலைகளில் ஓட்டை உடைசல், உடனடி நடவடிக்கைக்கு செயலி!

## இந்தியா-ஜப்பான் முயற்சியில் 'ஸ்மார்ட்போன் மேப்'

சாலையில் பள்ளம், விரிசல், பொத்தல் போன்ற பழுதுகள் இருந்தால் அதை மக்களே படம் எடுத்து செயலியில் பதிவேற்றலாம். இதன் மூலம், பழுதடைந்த சாலைகள் சீரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்தியா-ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக இணைந்து சாலை வரைபட செயலியை உருவாக்கி வருகிறார்கள்.

இந்தியாவில் தங்க நாற்கர திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சுங்கவரி வசூல் செய்தாலும், மழை வெள்ளத்துக்கு சாலைகள் பழுதடைந்து விடுகிறது. இதை தேசிய நெடுஞ்சாலைகள் துறை பராமரிப்பதிலும் மெத்தனம் காட்டுகிறது. இதனால் விபத்துகள் அதிகரிக்கிறது. இப்பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையிலும், சாலை மேம்பாட்டை கருத்தில் கொண்டும் ஸ்மார்ட்போன் மூலம் இந்தியா, ஜப்பான் நாட்டிலுள்ள சாலை வரைபடத்தை படம் பிடித்து செயலி உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த கூட்டு திட்டத்தில் ரூர்கேவை சேர்ந்த ஐஐடி, டோக்கியோ பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஐரோப்பியாவை சேர்ந்த அலெக்சாண்டர் மிராஜ் என்ற விஞ்ஞானியிடம் இருந்தும், இதற்கான தகவல்களை பெற்று வருகின்றனர். இந்தக்குழு சாலையின் நிலையை தானாக கண்காணிக்கும் ஒரு செயலியை உருவாக்க இருக்கின்றனர். இதனால் சாலையில், பொத்தல், விரிசல், வேகத்தடை, பள்ளம் ஆகியன உடனுக்குடன் கண்டுபிடிக்கப்படும்.

இது குறித்து இந்தியக் குழுவை மேற்பார்வையிடும் ரூர்கே ஐஐடி பேராசிரியர் துர்கா தோஷ்னிவால் கூறுகையில், ''சமூக பொருளாதார கட்டமைப்பில், சாலை உட்கட்டமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது. சாலைகளின் நிலையை அடிக்கடி கண்காணிப்பதால் பாதுகாப்பு, விபத்தில்லா பயணம் அமையும். நாடு முழுவதும் உள்ள சாலைகளை பராமரிப்பது மற்றும் கண்காணிப்பதில் உள்ளாட்சி நிர்வாகங்கள் அதிக நேரத்தை செலவிட முடிவதில்லை. எனவே, ஸ்மார்ட்போன் மூலம் ஒரு செயலியை ஜப்பான் ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சியோடு உருவாக்கி வருகிறோம். 'ஸ்மார்ட்போன் மேப்பிங்' எனப்படும் இந்தச் செயலி மூலம் மக்கள் தங்கள் பகுதியில் பழுதடைந்துள்ள சாலை குறித்த விவரங்களை நேரடியாக கிளவுட் சர்வரில் பதிவேற்றம் செய்ய முடியும்'' என்றார்.



**★ டெல்லி சாலையில் சேதங்களை செல்போனில் படம் பிடிக்கும் பெண் ஆய்வாளர்**

**● இந்திய-ஜப்பான் குழு இதுவரையில் 31 ஆயிரம் பழுதடைந்த சாலைகளை மேப்பிங் செய்துள்ளது.**

**● ஜப்பானில் இச்சி ஹரா நகரம், சிபா நகரம், சுமிதா வார்டு, நாககுட்டே நகரமும், இந்தியாவில் டெல்லி, குர்கான், அரியானா நகர சாலைகளும் இதில் அடங்கும்.**

### விபத்து எண்ணிக்கை இந்தியாவில் குன்று, குழி சாலைகளால் நடந்துள்ள விபத்து களின் விவரம்:

| | |
|---|---|
| 2016 | 6,424 |
| 2017 | 9,423 |
| 2018 | 4,896 |
| 2019 | 4,775 |
| 2020 | 4,775 |

### எதனால் நடக்கிறது?

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சக அறிக்கையின்படி, 'கூர்மையான வளைவுகள், பள்ளங்கள் மற்றும் செங்குத்தான சாய்வுகளை கொண்ட சாலைகளில் விபத்து கள் அதிகம் நடக்கிறது. இதை வெற்றிகரமாக கண்காணிக்க ஒரு கருவி அவசியம்' என கூறியுள்ளது.

– நவம்பர் 15, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# உங்களின் கருத்து

நிகழ்வு சாட்சி

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக வாலிபர் உலகம் பத்திரிக்கை மாதந்தோறும் வெளியிட்டு வருகிறோம். அநேகர் சந்தா செலுத்தி சந்தாதாரர்களாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு மாதமும் பலவிதமான தலைப்புகளில் கட்டுரைகள், சாட்சிகள் மற்றும் பல ஆலோசனைகளைப் படித்து வருகிறீர்கள். நீங்கள் படித்ததில் எந்த பகுதி உங்களோடு பேசியது அல்லது எந்த பகுதி பிடித்திருக்கிறதோ அந்த பகுதியை டிக் ✓ செய்து, அதன் மூலம் நீங்கள் கற்றுக்கொண்டது அல்லது தேவன் உங்களோடு பேசியதைச் சுருக்கமாக இரண்டு வரிகளில் எழுதி இந்தப் பக்கத்தை போட்டோ எடுத்து கீழேக் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கு** Whats app-**ல் தெரியப்படுத்தவும். அதுமாத்திரமல்லால் உங்களது கருத்துக்களையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.**




வேதாகம புதையல் வேட்டை
ஆராய்ச்சி கட்டுரை
சாதனை
சிறப்புக் கட்டுரை
வேத ஆராய்ச்சி
முகப்பு செய்தி




☐ தலைவாசல் ☐ சாட்சி ☐ முகப்பு செய்தி ☐ செய்தி
☐ நிகழ்வு ☐ சாதனை ☐ சிந்தனை சிதறல் ☐ ஆராய்ச்சி கட்டுரை
☐ வேத ஆராய்ச்சி ☐ ஜெபக்கையேடு ☐ வேதாகம புதையல் வேட்டை
☐ எச்சரிப்பின் செய்தி ☐ உண்மை சம்பவம் ☐ செய்திகள்






.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

+91 - 9750955547

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-11-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

"மிகவும் சிறியவராகிய...இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே (இயேசுவுக்கே) செய்தீர்கள்..."

*பண்டிகை நாட்களில்...*

# ஏழை-எளிய மக்களையும்
## *நினைத்துக் கொள்ளுங்கள்!*

ஒவ்வொரு வருடமும், கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில், நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள் - புது வாழ்வு சங்கத்தின் மூலமாக ஏழை-எளிய மக்களுக்கு புத்தாடைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள்; இவற்றுடன் கிறிஸ்துமஸ் வெகுமதியுடன் ஐக்கிய விருந்தும் வழங்கி, அவர்களை மகிழ்விக்க கர்த்தர் கிருபை பாராட்டி வருகிறார்.



கிறிஸ்துக்குள் பிரியமானவர்களே!
இந்த பண்டிகை நாட்களில்
நீங்களும் எங்களோடு இணைந்து
கிறிஸ்துவின் அன்பை, ஏழை-எளிய
மக்களோடு பகிர்ந்து மகிழ, உங்களை
அன்போடு அழைக்கிறேன்.
இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.
ஏவப்படுகிறவர்கள், உங்கள்
நன்கொடைகளை உற்சாகமாக
கொடுத்துத் தாங்குங்கள்.

- உங்கள் சகோதரன்.

**NLS Google Pay**
**70947 77781**

**SCAN & PAY**
Merchant Name: NEW LIFE SOCIETY TRUST
Upi Id: NEWLIFESOC@SBI

**Online Donations: www.newlifesociety.in**

**Foreign Contributions: +91 890 383 5315.**

*NEW LIFE SOCIETY, Nalumavadi-628211, Thoothukudi Dt., T.N., India.*
*E-Mail: accounts@newlifesociety.in*

உங்களது நன்கொடைகளை மணியார்டர் (M.O) மூலமாகவோ, அல்லது 'New Life Society' என்கிற பெயரில் **Cheque / DD** மூலமாகவோ அனுப்பலாம்.

**உங்கள் நன்கொடைகளை அனுப்ப...**

Bank Details

| Jesus Redeems | A/C Name | New Life Society |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank Ltd., | Bank Name | Tamilnad Mercantile Bank Ltd., |
| 4491 5031 087 5001 | A/C No | 054 1007 1040 0513 |
| Nalumavadi, Thoothukudi Dt., | Branch | Prahasapuram, Nazareth |
| 000449 | Branch Code | 000054 |
| TMBL 0000449 | IFS Code | TMBL 0000054 |
| TMBLINBBTUT | Swift Code | TMBLINBBTUT |

உங்கள் நன்கொடைகளுக்கு (இந்திய குடிமக்களுக்கு மட்டும்) 80Gயின் வருமான வரி விலக்கு உண்டு.

மேலும் விபரங்களுக்கு: +91 890 383 5315, +91 98427 35305.

***உங்களுக்கு அன்பின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!***